Registered M—483.

# தமிழகம்.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
5- DEC 1908
MADRAS

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குச்
சிந்தனைத் தூறு மறிவு."

வால்யூம் 2] 1906வருஷம் ஆகஸ்ட்டுமீ [ ந. 8.

விஷயங்கள். பக்கம்.

1. 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழகம் .... 185.
2. சுதேசாபிமானம் .... 193.
3. தமிழகச் செய்தி .... 194.
4. இந்தியாவில் உபயோகித்துவரும் தறிகள் .... 197.
5 கிண்டர் கார்ட்டன் அல்லது குழந்தைப் பயிற்சி ... 202.
6. தொல்காப்பியப் பாயிர விருத்திப் பரிசோதனை மறுப்புநிராகரணம் .... 208.
7. பாயிரவிருத்திப் பரிசோதனை ... 210.
8. மனைவி குணியாயிற் கணவன் வளவனே... 214.

பத்திராசிரியர்கள் :— T. இராஜமையங்கார், B. A., L. T.
C. S. முத்துஸாமி ஐயர்.

தஞ்சை:
கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

வருஷ சந்தா ரூ. 1—8—0. } 1906. { தனிப்பிரதி அணா 2½
பழையபிரதி அணா 3

சிங்கப்பூர், பினாங்கு முதலான விடங்களுக்கு—ரூ 2—8—0.

*Copyright Registered.*

உ

திருச்சிற்றம்பலம்.

தமிழ்நாட்டின்பல பகுதிகளினின்று நாளுக்கு அனுப்பப்பெறும் பத்திரிகைகளுள்ளே, 'தஞ்சைத்தமிழகம்' என்பது, யான் அவாவுடன் எதிர்பார்க்கப்படுவனவற்றில் ஒன்றாகவுள்ளது. தஞ்சைத் தமிழ்ச்சங்கத்தாரது நன்முயற்சியால் நடைபெறும் இப்பத்திரிகை, தமிழ் வளர்ச்சிக்கு வேண்டப்படும் மொழிபெயர்ப்புக்களும் சாத்திரங்களும் பிற இனிய குறிப்புக்களும் உடையதாய்க் காலத்தே வெளியேறுதலால், என்னைப்போலவே தமிழ் மக்கள்பலரும் இதன் நல்வரவுக்கு மகிழ்வார்களென்று நம்புகிறேன். ஜனசமூகத்துக்கு இன்றியமையா விஷயங்களும், காலநிலையைத் தழுவி எளிய நடையில் இப்பத்திரிகையில் எழுதப்பட்டு வருதல் விரும்பத்தக்கதே. தஞ்சைச் சங்கத்தாரால் தமிழ்வளர்ச்சிக்கண் ஊக்கத்தோடு செய்யப்பெறும் முயற்சிகளில் இப்பத்திரிகை சிறந்ததொன்றாகவும் நாட்டுக்கு நற்பயனளிப்பதாகவும் இருத்தலால், இதன் நடைபெறு முட்டின்றிச் செல்லற்கண்ணதே என் முழுநோக்கமும். பொதுவாக, உயரிய பத்திரிகைகளை விரும்பி யாதரித்து அவற்றின் பயனையடையவல்ல குணம் நம் நாட்டார்க்குள் இன்னும் பரவாமை கண்டு விசனிக்கத்தக்கதாயினும், அக்குணம் நம்மவர்க்குட் பரவுதலை நோக்கமாகக்கொண்டு தஞ்சைத்தமிழ்ச்சங்கத்தார் உழைத்துவரப் பின்வாங்காரென்றே நம்புகிறேன். இந்நன்முயற்சிக்குத் தக்கபயனை, திருவருள், நாளடைவில் அடைவிக்குமென்பதே என்றுணிபு.

தமிழ்ச்சங்கம்,
மதுரை.
1—8—06.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை.

---

## விசுவநாதம்.

நமது பத்திரிகை வாயிலாக "விசுவநாதம்" என்னும் அரும் பெயர்பூண்டு 1905௵ ஜனவரி முதல் வெளிவந்து கொண்டிருந்த மதுரையை ஆண்ட நாயக்கராஜ வம்சதிலகனும் கீர்த்திப் பிரதாபனுமான விசுவநாதனது சரித்திர சம்பந்தமான நாடகம் அகவற்பாவில், படிப்பவர்களுக் கினிமையைத் தரத்தக்கதாய் எழுதப்பெற்று ஜூன்௴ சஞ்சிகையில் இனிது முடிவுபெற்றது. இதைப் புத்தகரூபமாக வெளியிடவேண்டுமென்று கூறிய பல நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஐந்து அங்கங்களோடு கூடிய இந்நாடகத்தை டெம்மிசைஸ் சுமார் 150 பக்கங்களில் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு வெளியிடக் கருத்துக்கொண்டனம். புத்தகம் 1-க்கு விலை ரூ. 1 அணா 8 ஆகும். வருகிற நவம்பர்௴ 30உ-க்குள்ளாக இந்த ஆபீஸ் மானேஜருக்கு முன்பணமாக அனுப்பித் தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்பவர்களுக்கு ரூ. 1-க்குக் கொடுக்கப்படும்.

C. S. முத்துஸாமி ஐயர், மானேஜர், தமிழகம்.

சுப்பிரமண்யர் துணை.


# தமிழகம்.

வால்யூம் 2. | 1906-௵ ஆகஸ்டு௴ | நம்பர் 8.


## 1800 வருஷங்களுக்குமுந்திய தமிழகம்.*

எமது படத்திற்காட்டிய நாட்டிற்குச்சுமார் 1800 வருஷங்களுக்கு முன்னர் "தமிழகம்" என்று பெயர் வழங்கி வந்தது. இதற்காதாரமாக ஏற்கனவே பதிற்றுப்பத்திலிருந்து,

"இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇ............................" (2-ம்பத்து, பதிகம்)

என்ற இரண்டடிகளையும் [illegible]றோம். மேலும் ஆதாரம் வேண்டின், சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை 37-ம் அடியையும் ("இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறிய,") மணிமேகலை உலகவறவிபுக்ககாதை 62-ம் அடியையும் ("சம்புத்தீவினுட் டமிழக மருங்கில்") பார்த்துக்கொள்க.

2. இந்நாட்டின் நான்கெல்லைகள்:—வடக்கு திருவேங்கடமலை, தெற்கு குமரிமுனை, கிழக்கும் மேற்கும் சமுத்திரம். ஆதாரம்,

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு," சிலப்பதிகாரம்8-ம்காதை

* இவ்வியாசத்தில் அமைந்த கருத்துக்கள் காலஞ்சென்ற வி. கனகசபைபிள்ளையவர்கள் தெரிவித்தவைகள்.

"வேங்கடங் குமரி தீம்புனற் பெளவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே."......செண்டியார்
"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து."..........தொல்காப்பியம்,
"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்......"நன்னூல்.

3. அயல் நாடுகள்:— தமிழகத்தின் வடக்கே கொங்கணம், குடகம், துளுவம், எருமைநாடு முதலான நாடுகள் இருந்தன. வேங்கடத்திற்கு வடக்கே வடுகர் வசித்தனர். அதற்கும் வடக்கே கலிங்கர், பங்களர், கங்கர், கட்டியர், ஆரியர் முதலானவர் வசித்தார்கள்.

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடவா ரியரொடு..................." சிலப்பதிகாரம். ப. 460.

தமிழ்ப்புலவர்கள் எடுத்துக்கூறிய வேறுநாடுகளும் பல. கூலவாணிகன் சாத்தனர் மகதநாட்டையும் அதன் முக்கிய நகரமாகிய கபிலவஸ்துவையும் பற்றிப்பாடியிருக்கின்றார். அதுவருமாறு:—

"மழைமா றுமகதநன் னாட்டுக்
கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
கருமகப் பெருமைக்கபிலையம் பதியின்..." மணிமேகலை.ப.234.

இளங்கோவடிகள் மகதநாடு, மாளவதேசத்தின் பிரதான பட்டணமாகிய அவந்தி, வச்சிரநாடு முதலான நாடுகளைப்பற்றிக் கூறுகிறார்.

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரு
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமு
மவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரணவாயிலும்."5-ம்காதை வரி 99-104

மேலும் மணிமேகலையார்,

"இலங்கா தீவத்துச் சமனொளி யென்னுஞ்
சிலம்பிணை யெய்தி..........................." ப. 275.

என்று குணகடலிலுள்ள இலங்கைத்தீவினையும் அதன் கண்ணுள்ள உயர்ந்த சிகரமான சமனொளியையும்,

# 1800 வருஷங்களுக்கு முந்திய தமிழகம்

* கரூர் அல்லது வஞ்சி.

.......................................................... "ஆறைந்தியோசனைத்
தென்றிசை மருங்கிற் சென்றுதிரை யுடுத்த
மணிப்பல் லவத்திடை.................................................."

[ப. 98.

என்று காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தெற்கேமுப்பதுயோசனை தூரத்தில் சமுத்திரத்தினல் சூழப்பட்ட மணிப்பல்லவத் தீவினையும், கூறுகின்றார். மேலும், அந்தக்காலங்களில் மணிப்பல்லவத்திற்கும் சாவகத்திற்கும் (ஜாவா) இடையே கப்பற் போக்குவரவிருந்ததென்றும், இலங்கைக்குக் கிழக்கே நக்கசாரணர் என்ற நாகர் ஜாதியார்கள் குடியிருந்த நக்கவாரம் என்று சில தீவுகளிருந்தனவென்றும் பின்வரும் மணிமேகலைச் செய்யுள்களால் நன்குவிளங்குகின்றது.

"மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவகநன்னாட்டுத் தன்பெயன் மறுத்தலி
னானுயிர் மடிந்த தரவோ யென்றலும்..." 14-ம் காதை வரி
[73-5

"ஊர்... கொண்டாங் குப்பைப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன்..........."16-ம் காதை வரி 38-40.

4. தமிழகத்தின் பதின்மூன்று நாடுகள்:—அக்காலங்களில் தமிழகம் பதின்மூன்று உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று செந்தமிழ்நாடு, பன்னிரண்டுநாடுகள் கொடுந்தமிழ் நாடுகள். செந்தமிழ் நாடொன்று பாண்டியநாடு. அதனைச்சூழ்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளாவன;—தென்பாண்டி, வேணுகுட்டநாடு, குடநாடு, பூழிநாடு, சீதநாடு, கற்காநாடு, பன்றிநாடு, புனல்நாடு, மலாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு என்பன.

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சே
ரேதமில் பன்னிருநாட் டெண்."

5. செந்தமிழ்நாடு: பிரதான பட்டணம், மதுரை: பாண்டியநாடென்பது இப்போதுள்ள மதுரை ஜில்லா. குன்றின் வளங்களும் நீர் வளமும் பொருந்தியது. தாவரங்கள் மிகுதியாக விளை

யும் சிறுமலை முதலிய மலைகளும் குமரன் வீற்றிருந்தருளும் பரங்குன்றும் அக்காலத்திலேயும் இருந்தன.

"கானமும் மலையினர் கடமுங் கடந்தா
லைவன வெண்ணெலு மறைக்கட் கரும்புங்
கொய்யூந் தினையுங் கொழும்புன வரகுங்
காயமு மஞ்சளு மாய்கொடிக் கவலையும்
வாழையுங் கமுகுந் தாழ்குலைத் தெங்கு
மாவும் பலாவுஞ் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்." 11-ம் காதை வரி [79 85.

பரங்குன்றின் பெருமையை நக்கீரர் உரைத்த திருமுருகாற்றுப்படையிற் காணலாம்.

பாண்டியர்கள் வீற்றிருந்து செங்கோல் நடத்திவந்த இராஜதானியாகிய மதுரையின் பெருமையைப் பரக்கக் காணவிரும்புவோர் சிலப்பதிகாரம் 14-ம் காதையாகிய ஊர்காண் காதையைப் படித்துத் தெளிக. அந்நகரம் உயர்ந்த மதிலும் அகன்ற [illegible]யும் கொண்டதாய் நான்மாடக்கூடல் எனும் பெயருக்கேற்ப நான்கு வாசல்களுடன் யவனர்களால் காக்கப்பட்டு இராசவீதியும் ஆவணமும் பொதுமகளிர் வீதியும் பலவிதமான கம்மியர்கள் வாழும் வீதியும் வெள்ளியம்பலமும் மல்க மிகவும் சிறப்புற்றது. செல்வமும் தமிழும் அறிவும் போகமும் நிறைந்தது. இத்தகைய நகரின் மதில் புறத்தே பாணர்கள் வசித்து அரசன் புகழைப் பாடினர்.

6. குடகடற்கரை நாடுகள்:—குடகடலின் கரையைச்[illegible] நாடுகள் நான்கு. அவைகள் பூழிநாடு, குடநாடு, குட[illegible] வேணாடு என்பன. இந்நாடுகளின் பெயர்களே இவை[illegible] இயற்கையமைப்பினைக் குறிக்கும் பெயர்களாயிருக்கின்றன. [illegible] எனின் 'புழுதி' என்று பொருள்படும். ஆயின் மணற்பா[illegible] பூமியான இந்நாட்டிற்குப் பூழிநாடென்று பெயரிட்டது நலமே. இந்நாடு தற்காலத்தில் 'அகலப்புழை' என்ற பெயர்வாய்ந்த நதிக்கும் 'பொன்னனை' ஆற்றுக்கும் நடுவே இருந்தது. 'குடநாடு' எனின் 'மேற்றிசையிலுள்ள நாடு' என்று பொருள். இந்நாடு 'பொன்னனை' யாற்றுக்கும் 'பெரியா'ற்று முகத்துக்கும் இடையே இருந்தது. 'குட்டம்' என்றால் 'குளம்' என்றுபொ

ருள். ஆகவே குளங்கள் நிறைந்த பூமியான குட்டநாட்டிற்கு இப்பெயர் வாய்ந்தது. தற்காலங்களில் கொட்டயம் என்றும் கொயிலன் என்றும் [illegible]றப்படும் பட்டணங்களைச் [illegible]ற்றிய நாடு இந்நாடு. இந்நாட்டை யூடுருவிச் செல்வது பாலை[illegible]று. இப் பாலையாறு தனது முகத்துவாரத்தில் பல சிறிய தீவு[illegible]க்கற்பி த்து மாரிகாலத்து மழையால் எக்கலடித்து முகம் மறைந்து பல குளங்[illegible]ண்டாக்கி [illegible]டைவதினால் இவ்வாற்றி[illegible] கமத்தில் உ[illegible]டாகும் பல குளங்களையும் தீவு[illegible]யுங்கண்ட ஜனங்கள் இந்நாட்டிற்கு குட்டநாடு என்று பெயரிட்டார்கள். இந் நாட்டிற்குத் [illegible]ந்கே உள்ளது வேணாடு. தாழ்ந்த குன்றுகள் மீதும் பள்ளத்தாக்குகளிலும் வேணுவின் கூட்டம் மல்கித்தழைத் தலால் இந்நாட்டிற்கு வேணாடு என்று பெயரிட்டார்கள். குட் டநாட்டுத் தென்[illegible]னல்லை முதல் கன்னியாகுமரிமுனை வரையிலும் இந்நாட்டின் [illegible]ரம்பே.

7. கடைச்சங்கத்து நூல்கள் அந்நாட்களில் இந்நாடுகளிற் செ ழித்த [illegible]ங்களையும் கைத்தொழில் வே[illegible]களையும் ஜனங்களின் நாகரிகத்தினையும் ஒருவன் தெள்ளிதின் [illegible]வேண்டின் அத ற்கு ஓர் வழியுளது. பழைய சங்கத்துச் செய்யுள்களில் இவ்வி ஷயங்களைப்பற்றின விரிவான விருத்தாந்தங்கள் பல உள்ளன. தமிழெனும் அணங்கு தனது பிள்ளைகளான தமிழகத்தாரை வெறுத்துப் பொதிய மலையின்கண் மறைந்துவிட்ட காலத்தில் அவ்வணங்கின் வருத்தத்தைப் போக்கி மறுபடியும் தமிழகத்தார் அவ்வணங்கினை வணங்கி வழிபாடு செய்யும்படி அருள்பொழிந்த [illegible] வள்ளலாராகிய பிரும்மஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயர் அவ [illegible]சிநோக்காது மெய்வருத்தம் பாராது பலநாடுகடோறும் [illegible] திரிந்து பல்லோர் பயனற்ற சுவடிகள் என்று பொருள [illegible]து பரண்மீதெறிந்திருந்த ஏடுகளைப் பாடுபடுத்தேடிக் [illegible]ணர்ந்து பொற்குவியலை யெண்ணி யெண்ணிப்பார்க்கும் [illegible]சையாளரைப்போல் அவைகளைப்பரிசோதனை செய்து எமக்குக் கடைச்சங்க நூல்களைத் தந்தார். இவர்பட்ட சிரமத்திற்குத் தமிழகத்தார் என்ன கைம்மாறு செய்வார்களோ அறியேம்! இடையே நமது தயாள சிந்தனையுள்ள கவர்மெண்டார் அவரு க்கு “மஹாமஹோபாத்தியாயர்” என்னும் பட்டமளித்துச் சிறி ய பொருளுதவியும் புரிந்தனர். அவரிடத்தில் பாடங்கேட்ட ஆங்கில மாணக்கர்கள் செய்யவேண்டிய கடமை ஒன்றுளது.

அது யாதெனில், அவர் வெளியிட்ட சங்கநூல்களையெல்லாம் வாங்கிப்படித்து அந்நூல்களிலுள்ள தேசசரித்திர வாராய்ச்சிக்கு அநுகூலமான விஷயங்கள் அபரிமிதமாக விருக்கின்றன கண்டு அவர் தமிழகத்திற்குச் செய்த பேருதவி இத்தன்மையதென அறிந்து புலனுட்கொண்டு அவரை அநுதினமும் போற்றுதலே!

8. ப்ளினி, பெரிப்ளஸ், டாலமி: மேலே கூறியவண்ணம் சங்க நூல்களைப்படித்தல் ஓர்வழி. மற்றோர்வழி இத்தலைப்பிற்காட்டிய 'ப்ளினி' என்பவர் எழுதிய சரித்திரத்தையும், 'பெரிப்ளஸ்' என்றவோர் சிறிய நூலையும், 'டாலமி' என்பவர் எழுதியவற்றையும் ஐயந்திரிபறக்கற்றுணர்தல். சங்கநூல்களைக் கற்றுணர்தலுக்கே இன்றியமையாத யோக்கியதை தேசசரித்திரவாராய்ச்சி யென்று என் புல்லறிவிற்குப் படுகிறது. சரித்திர வாராய்ச்சிகளைச் செய்யப்புகாத தமிழாசிரியர்க்குச் சங்கநூலே விளங்காது. ஆதலின் அயல்நாட்டார் நமது தமிழகத்தை எவ்விதம் வருணித்தார் தமிழகத்தார் நாகரிகத்தை எவ்விதம் கருதினர் என்று நாம் அறிந்துகொள்ளக்கூடிய வழியுண்டானால், அவ்வழியை வீணிலே விட்டுவிடக்கூடாது. இது காரணமாகவே 1800 வருஷங்களுக்குமுன் நமது தமிழகத்தின் நாகரிகத்தையும் வர்த்தகத்தையும் உற்றுணர்ந்த யவனர்களின் நூல்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இந்த யவனர்களைப்பற்றிச் சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதையில்,

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்"

என்று இளங்கோவடிகள் பாடினர். உரையாசிரியர் 'யவனர்' என்னும் பதத்திற்கு 'மிலேச்சர்' என்றும் 'பரதேசிகள்' என்றும் பொருள் கூறினர். "பரதேசிகள்" என்னும் பொருளே விசேஷமானது. 'யவனர்' என்னும் வார்த்தை சிலர் பாரஸீகரைக்குறிக்கிறதென்றும் சிலர் அரபியர்களைக்குறிக்கிறதென்றும் சிலர் கிரேக்கர் ரொமேனியர்களைக் குறிக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். அடியார்க்கு நல்லார் கூறியதுபோல 'பரதேசிகள்' என்று பொருள்கொண்டால் மேலே கூறிய ஒருவரையும் நாம் விலக்க வேண்டியதில்லை. உண்மைபேசப்புகின் தமிழகத்திற்குப் பாரஸீகரும் அரபியரும் கிரேக்கரும் ரொமேனியரும் யாவரும் வந்திருப்

பதாகத்தெரிகிறது. அரபிவிரிகுடாமீது ஆவங்கம்செலுத்திவந்தவர் இவர் யாவருமே. முக்கியதலைக் கடலேறிடமாய் எகிப்துநாட்டில் நிலைபெற்ற துறைமுகமான அலெக்ஸாண்டிரியா என்று கீர்த்தி பெற்ற பட்டணத்தை நடுநிலையாக நின்று இந்தியாமுதலான கீட்டிசை நாடுகளின் விளைபொருள்களை மேற்றிசை நாடுகளில் உய்த்து மேற்றிசை நாட்டின் பொருள்களைக் கீட்டிசை நாடுகளில் செலுத்தி வர்த்தகம் புரிந்தது. அப்போது நாவாய்களைச் செலுத்தியவர்கள் மேலே கூறப்பட்டப் ப்ரதேசிகளே. அரபிக்கடலுக்கு அக்காலங்களில் "இரித்திரே" என்ற பெயரை யவனர்கள் இட்டிருந்தார்கள். இவ்விருத்திரே கடலில் கப்பல்மார்க்கமுங் குறிக்கப்பட்டிருந்தது. எகிப்துகடல், பாரஸீகக்குடா முதலான விடங்களில் கப்பல் தங்குமிடங்களையும் ஸிந்துநதிசங்கமம் முதல் கங்கைநதிவரையும் வங்கமேறுந் துறைகளையும் செம்மையாகக் கடலோடிகளுக்குக் காட்டும்படி யவனர் எழுதிய நூல் 'பெரிப்ளஸ்' என்பது. இந்நூலை இயற்றியவர் யாவரென நன்கு விளங்கவில்லை. சிலர் இக்கிரந்த கருத்தா 'எரியன்' என்பவர் என்கின்றார். யாவரேயாயினும் ஆகுக. நமக்குவேண்டிய செய்திக்கு இது தெரியவேண்டிய தவசியமில்லை. இந்நூலிலும் 'ப்ளினி' என்பவர் எழுதிய சரித்திரத்திலும் அதற்குப் பிறகு அலெக்ஸாண்டிரியா நகரத்துக் கிளாடியஸ் டாலமி என்பவர் எழுதிய "ஜியாகிராபியா" என்ற நூலிலும் தமிழகத்தைப்பற்றிய பிரஸ்தாபத்தையும் தமிழகத்தின் வியாபாரத்தையும் நாகரீகத்தையும் இரித்திரே கடலோடும் மார்க்கத்தையும் பிரயாணத்திற் குசிதமான காலங்களையும் யவனர் குடகடலோராய்த் துறைமுகங்களிற் றங்கிய முத்திங்களில் தமிழகத்தாருடன் உறவாடிக்கலந்து தமது நாகரிகத்தினையும் அறிவித்துப் பண்டமாற்றிக்கொண்ட சிறினையும் பரக்கக்காணலாம்.

(இன்னும் வரும்)

பத்திராசிரியர்.

# சுதேசாபிமானம்

(ஆங்கிலவித்வான் ஸர் வால்டர் ஸ்காட் வாக்கினின்றும் இதன்கருத்து மொழி பெயர்க்கப்பட்டது.)

இதுவென் சுதேச மிதுவென் னாடெனக்
கதுமெனக் கருத்திற் கொள்ளாச் சயவனு
மான்மனஞ் செத்த வாடவ னுளனோ?
கான்மலை திரிந்துங் கடற்கரை போகியு
மயற்புலங் கண்டுதன் னகமே நோக்கிப்
பொற்றாய் தன்னிலப் பேரெழில் காணத்
திளைத்தெழு மார்வஞ் செழுந்துக் கிளாந்தி
யுளைத்தவ னல்லா வொருவனு முளனோ?
உளனே யாயினீ யுற்றவன் காண்க.
வள்ளிசை பாடும் வாணரு மொருவ
மவன்புகழ் பாடார். அவன்பெயர் பெரிதா
யவன்றன வுவாவி னளவினைக் கடப்பதா
யமைந்திடச் சிறப்பினு மவன்பெய ரோதார்,
அமைவருஞ் செல்வமுந் துப்புங் கருதார்!
ஆதலின் றமக்கே யாக்கம் பெருக்கிச்
சாதலி னிருமடி சாகுமம் மாந்தர்
பெரும்பே ரிழந்து பிறந்தமண் புகுவர்!
அருங்கவி வாண ராசிகள் கூறார்,
பாணரும் பாடார், பக்கலும் பரிவுறார்!
யாண்டிவ் வுலகில் யாரிவர் கடையரே!

பத்திராசிரியர்

இதனை அச்சிட அனுப்பியகாலையில், ஸ்ரீ வாணீ விலாஸினியின் 13-வது ஸஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. அதில் மதுரை ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் மேற்படி கருத்தையே அமைத்து மற்றோர் மொழிபெயர்ப்புச் செய்யுள் செய்திருந்தார்கள். அது எளிய நடையில் இனிமை பயப்பதாய் ஆங்கில வித்வான் மொழிகளுக்கு என் செய்யுளைக்காட்டிலும் மிகவும் ஒட்டியிருந்தமையின், அதனையும் இவ்விடம் வெளிப்படுத்தலாமென்று நினைத்து ஈங்கு வரைகின்றேன்.

## தேசாபிமானம்.

“[illegible] சொந்தவூர் ஈதென் பிறப்பிடம்”
எனத்தன் னுள்[illegible] எப்போ தாயினும்
சொல்லுத[illegible] கொண்ணு நல்லுணர் வில்லா
ஒருவ னேனு முயிரு[illegible] ளுளனோ?
அந்[illegible]டி லலை[illegible]தபின் தன்னூர்
நோக்கிக் கா[illegible]க்கிய காலையில்
உள்ள மொளிரா வொருவனு முளனோ?
இத்தகை யொருவ னிருப்பனே யாயின்
சென்றவன் யா[illegible]ன் என்றுநன் றறிதி!
உயரிய பட்டம் உடையோ னாயினும்
பெயரால் அவன்மிகப் பெரியவ னாயினும்
ஆசை விரும்பு மளவிலா நிதியம்
படைத்தவ [illegible]வம் பரவசத் துடனெப்
பாணரு மவன்புகழ் பாடுத லொழிவர்!
தன்னையே யாவுமா[illegible] உன்னுமப் புன்மையோன்
இடம்பொருள் ஏவல் இவையெல்லா மிருந்தும்
இருக்கையி லேநல் இசையெலா மிழப்பன்.
இவ்வா றிருமுறை இறந்திப் பதடி
புலப்புவா ரற்றும் பூஜ்யதை யற்றும்
பாடல் பெறுதும் பண்டுதான் தோன்றிய
இழியபுன் புழுதிக் கிழிந்துசெல் குவனே!

ம. கோபாலகிருஷ்ணையர்.

---

## தமிழகச் செய்தி.

### டாக்டர் ஜீ. யூ. போப்பு.

இந்திய ராஜ்ய காரியதரிசியான மிஸ்டர் ஜான்மார்லி தமிழில் மகாபண்டிதரென்று பேர்பெற்ற டாக்டர். ஜீ. யூ. போப்புக்கு ஏஷியாட்டிக் ஸொஸைடியாரின் பதக்கமளித்தார். இந்தப்பக்கம் மூன்றுவருஷத்திற்கு ஒருதரம் கீட்டிசை நாட்டுப் பாஷைகளில் பாண்டித்தியம் பெறும் அங்கிலர்களுக்குக் கொடுக்கப்படுவது. இதனை நமது டாக்டர் ஜீ. யூ. போப்பு பெற்றார்

என்று கேட்க மிகவும் சந்தோஷமடைகிறேன். இவருக்கு வயதாகியும் தனக்கு இனிமை பயக்கின்ற தமிழ்ப் பாஷையைப் படிப்பதில் மிகவும் அவாமிகுகின்றது. இவர் தமிழ்ப்பாஷையைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயங்கொண்டிருக்கிறார். ஏஷியாட்டிக் ஸொஸைட்டியார் முன்னிலையில் "ஜனங்கள் பிரெஞ்சு, ஜர்மன், இத்தாலியா முதலான பாஷைகளைப் படிக்கிறார்களே! அவைகளுக்குப் பதிலாய்த் தமிழைப்படிக்கில் மிகுந்த பயனுண்டாகும். நான் ஸ்திரீகளுக்குத் தமிழ் கற்பித்தேன். அது அவர்களுக்கு ஏற்ற பாஷையாக இருக்கிறது. அவர்கள் மெல்லிய நாவிற்கும் அபிருசிக்கும் பொருத்தமான பாஷை தமிழே!" என்று தமிழைச் சிலாகித்துக் கூறினார். நமது பாஷையின் அருமை பெருமைகளை அறிந்து அதற்கென்று உழைத்துவரும் அபிமானிகள் டாக்டர் ஜீ. யூ போப்பு அவர்களிடம் மிகுந்த அன்பு பாராட்டுவார்கள். தமிழ்பேசும் 160 லக்ஷம் ஜனங்களுக்கும் இவர் ஓர் பெருமையைச் செய்தார்.

## தமிழ்ப்பயிற்சியும் யூனிவர்ஸிடியும்.

சென்ற ஐம்பதுவருஷகாலமாக நம் எதிர்பாராத திசையிலிருந்து தமிழிற்கு ஓர் பேராதரவு ஏற்பட்டிருந்தது. டாக்டர் கால்டுவெல் துரைமுதலான பாதிரிமார்களும் டாக்டர் ஸ்யூவல், டாக்டர் பர்னல் முதலான சிலாலிகித சர்ச்சர்களும் தமிழினைப் போற்றிவந்தார்கள். கனந்தங்கிய நமது சென்னை யூனிவர்ஸிடியாரும் தமிழ்ப்பயிற்சிக்கு ஓர் இடமமைத்து பீ. ஏ. முதலான பட்டப் பரீக்ஷைகளுக்குத் தயாராகும் மாணவர்கள் இரண்டாவது பாஷையாகத் தமிழைப் பயிலலாமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். அரைமனதோடாகிலும் கால்மனதோடாகிலும் இதுகாறும் தமிழினைச் சிலர் படித்துவந்தார்கள். பிரபலவரசர்களும் மடாதிபதிகளும் தமிழைப் போற்றுதல் என்னும் கடமையை மறந்துவாளா இருந்த காலத்து இவ்விதமான ஆதரவும் மிகவும் பயனை யளித்தது.

இதுநிற்க, இப்போது, யூனிவர்ஸிடியார் மெற்றிகுலேஷன் வரைக்கும் மாணாக்கர்கள் தமிழைப் பயிலட்டுமென்றும், அதற்குமேல் பீ. ஏ. பட்டப் பரீக்ஷைக்குப் போகிறவர்களில் பாஷாஞ்ஞானம் பெற விரும்புகிறவர்கள் மாத்திரம் ஸம்ஸ்கிருதத்தையும் பேசும் பாஷைகளில் ஒன்றையும் படிக்கட்டுமென்றும் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். அதாவது பீ. ஏ. பட்டம்பெற விரும்

புகிறவர்கள் தமிழ் ... கலான பேசும் பாஷைகளின் அக்ஷரங்களையுந் தெரி...துகொ...ளாமல் ஆங்கில பாஷையின் ஞானத்தைத் கொண்டே தே...ந்து...டலாமென்பது. இவ்விதியானது ஏற்பட்டுவிடும் பக்ஷத்தில் ...ஷைகளைப்படிக்க விரும்புபவர்கள் மிகவும் அருமையாய் விடுவார். அவருள்ளும் தமிழை அப்படியாவது படிக்கவேண்டுமென்று விரும்பும் தமிழகத்தார் சப்தமே புரிதா...ன ... ஸம்ஸ்கிருதத்தைப் படிக்கவேண்டியிருக்கிறதே என்று மயங்குவார்கள். ...னியான தமிழைவிட்டுத்தொலைக்கவேண்டுமென்று விரும்பும் ...தசாபிமான மற்ற சிறுவர்களுக்கு இது பழம் நழுவிப் பாலி...ழுந்த...ற்போலாகும்.

ஆயினும் யூனிவர்ஸிடியார் இது காறும் தமிழை பூஜித்ததும் இனிமேல் பூஜிக்காமல் நின்றுவிடுதலும் ஒப்பப்பயனையே கொடுக்...ம். ஏனெனில், தற்காலத்திய தமிழகத்தார் ...ோம்பரில் பெயர் பெற்றிருக்கின்றனர். சென்ற ஐம்பது வருஷங்களாக யூனிவர்ஸிடியாரும் பாதிரிமார்களும் சிலவிகித சர்ச்சர்களும் தனித்தனியே தமிழைப்படித்த டாக்டர் ஜீ. யூ. போப்பும், ப்ரொபெஸர் ஜூலியன் வின்ஸனும் தமிழைப்போற்றிவர, தமிழகத்திற் பிறந்து தமிழணங்கின் பாலையுண்டு ...... இடருவதற்கொப்பத் தமிழை இகழ்ந்த நன்றியறிவற்ற நா... தமிழை வளர்க்க ...செய்தோம்? பங்காளத்திலும் பம்பாயிலும் அந்தந்நாட்டு யூனிவர்ஸிடிகள் அங்கங்கே பேசப்படும் பாஷைகளைப்போற்றிச்செய்யாமலிருக்கையில் பங்காளி பாபுகளும் மஹாராஷ்டிரர்களும் தத்தம் பாஷைகளை முறையே போற்...ற...ன மணிகளை வைத்திழைத்த மாலைகளைப்போற்செய்து அவ்வகளைப்பூணுகின்றனர். மேல்நாட்டுக் கலைஞானங்கள் ஒன்...றனும் பாக்கியில்லாமல் பங்காளி பாஷையில் இன்று அமைந்து...டக்கின்றது. மராட்டியிலுமப்படியே. திருவள்ளுவரும் கம்பரும் எத்தன்மையில் வைதத்னரோ அத்தன்மையினின்றும் நமது தமிழ்நகர்ந்ததில்லை. தமிழ் பூர்த்தி பெற்றதென்றும் அதனை இதன்மேல் விருத்திசெய்தல் கேடென்றும் அவ்வாறு ஒருவன் செய்யப்புகுவானாயின் அவன் தமிழணங்கின்மேல் கரியை வாரிப்பூசுகிறானென்றும் ...தும் சிலர் உளர். அவர் ஒருசார் நிற்க, ஒரு பா...ஷை ஓர் மரத்திற்குச் சமானமென்பது எமது கருத்து. மர...ம் ...ர்ந்துகொண்டே செல்லவேண்டும். பாதி வளர்ந்...து இனிமேல் வளரவேண்டாமென்று சூரியனது வெளிச்ச

[illegible]ம் பனியின் குளிர்ச்சியும் மேற்படாமற் [illegible] துவைத்தது போல மரத்தைச்சுற்றிக் கோட்டைகட்டி மேலே மண்டபம் வேய்ந்து வைத்தல் எங்கேனுமுண்டோ? கடைச்சங்கக்காலம் தமிழிற்கு இளவேனிலும் முதுவேனிலும். அதன்பிறகு பதினேழு நூற்றாண்டுகள் கார்காலமும் பனிகாலமும்; அவை சென்றபிறகு மறுபடியும் வேனிற்காலம் வந்ததும் [illegible] யும் தளிர்த்தல் வழக்கு. அவ்வேனிற்காலம் [illegible] குயில் கூவுதல் போலப் பலர் தமிழ்மலர் [illegible] என்றார். ஆயினுந் தமிழகத்தார் தூங்குகின்றனர். இவர் மகிழ்ந்தெழுந்து வேண்டாவிடின் இவரையன்றி எழுகின்ற [illegible] கிளைகளும் தளிர்களும் மகிழ்வுடையனவாய் இரா. இதுநிற்க, இவர் சோம்பி வளாவிருத்தலில், தமிழ் வளருதலில்லை. ஒரு தோட்டத்தில் வைத்த பல மரங்களில் ஒரு மரத்தைத் தோட்டக்காரன் கவனியாதிருத்தலையொப்ப அவரவர் அவரவரது பாஷைகளைத் திருத்திக்கொள்ள நாமே நமது பாஷையைப் பூர்த்திசெய்துகொள்ளாமலிருக்கிறோம். யூனிவர்ஸிடியார் நமது பாஷையைப் போற்றியென்ன! போற்றாமலென்ன? "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்."

பத்திராசிரியர்

---

# இந்தியாவில் உபயோகித்துவரும் தறிகள்.

(163-ம் பக்கத்தொடர்ச்சி.)

(5) கைத்தொழில் வேலையாளர்களின் முக்கிய தொழில்கள்.

நம் நாட்டில் கைத்தறிகளில் வேலைசெய்பவர்களின் இல்லங்களில் நுழைத்து அவர்கள் செய்யும் தொழில்களைச் சற்று கவனிப்போம். தறிகளில் வேலை செய்பவர்கள் எவ்வளவோ அவ்வளவுக்குச் சமமானபேர்கள் அத்தொழில் செய்பவர்களுக்கு உதவிபுரிந்து ஜீவித்து வருகிறார்கள் என்று நம் நாட்டு ஜனசங்கைக் கணக்கு நமக்கு அறிவிக்கிறது. மேலும் அது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் சராசரியில் நான்கு நபர்கள் என்று [illegible]க்கிறபடியால் அதேமாதிரியாக நெசவு வேலை செய்கிற வீடுகளில் உள்ளவர்கள் சராசரியில் நான்குபேர் ஆவார்கள். நான்கு

பேர்களுள்ள [illegible] குடும்பத்தில் இரண்டு பேர்கள் வேலை செய்பவர்களும் மற்ற இரண்[illegible] பேர்கள் அவர்களைச் சார்ந்து ஜீவிப்பவர்களுமாக ஆகிறார்கள். அவ்விரண்டு வேலைக்காரர்களில் ஒருவன் தறியில் வேலை செய்பவன். மற்றொருவன் தறியில் வேலை செய்பவனுக்கு தார் சுற்றிக் கொடுப்பதிலும் பாவு நூல்களைப் பாகம் [illegible]ரித்து சிக்கெடுப்பதிலும் வடியின் வழியாயும் அச்சின் வழியாயும் பாவு நூற்களைக் கோத்து வாங்குவதிலும் இன்னும் பல சில்லரை வேலைகள் செய்வதிலும் உதவுகின்றான். பாவு நூல் தயார் செய்வதும் கஞ்சிபோடுவதும் அதற்கென்று பிரத்தியேகமாக ஏற்பட்டவர்களால் தயா[illegible] செய்யப்படுகின்றது. நெசவு வேலை செய்கிறவன் லாபத்துக்சாகத்தானே வேலை செய்தாலும் செய்வான். அல்லது முதல்போட்ட வியாபாரிக்கு வேலை செய்து கொடுத்துச் சம்பளம் பெறுவான். நூல்களை வடி அச்சு இவைகளின் வழியாய்க் கோத்து வாங்குவதற்கு இர[illegible] நாட்களும் பாவு நூலை பாவுமரத்திற் சுற்ற ஒன்றரை நாளும் ஆகும். நாட்டுத் தறிகளின் பாவு நூல்கள் 18 கெஜம் முதல் 50 கெஜத்திற்கு மேல் அதிகப்படுவதில்லை. சராசரியில் நெய்வதற்கு எவ்வளவு காலம் ஆகிறதோ அதில் பாதிக்காலம் நூல்களைக் கோத்து வாங்குவதில் கழிந்துபோகிறது. மேலே உரைத்த பிரகாரம் [illegible]க்கிட்டுப் பார்க்கில் வேலைக்காரர் இரண்டு பேர்களில் ஒருவன் தறியில் வேலை செய்கிறான். அவனும் மூன்றில் இரண்டு பங்கு காலத்தைத் தறியிலும் மற்றொரு பங்கை நூல்களைக் கோத்து வாங்குவதிலும் கழித்து விடுகிறான். இக்கணக்கினால் நாம் அறிவது யாதெனில் மூன்று வேலைக்காரர்களிருப்பின் ஒருவன் தான் எப்பொழுதும் தறியில் வேலைசெய்துகொண்டிருப்பான். ஒரு நிமிஷத்திற்கு 25 த[illegible]வை நாடாவைச் செலுத்தக்கூடிய வேலைக்காரன் வஸ்திரத்தின் தன்மைக்குத் தக்கவாறு மூன்று கெஜம் முதல் 10 கெஜம் வரையில் நாளொன்றுக்கு நெய்யக்கூடும். சராசரி பார்க்கில் 6 கெஜம் நெய்வதாகும். இவ்வளவு நாளொன்றுக்கு நெய்யப்படவேண்டுமானால் 3 பேர்கள் வேலை செய்யவேண்டுமென்று மேலே எடுத்துக் காட்டினேன். ஆதலால் நாளொன்றுக்கு ஒருவன் நெய்யும் வஸ்திரத்தின் அளவு 2 கெஜம் அல்லது [illegible] அடி ஆகும்.

## (6) எதிர்கால நோக்கல்.

மேலேகாட்டிய கணக்கால் நாம் அதைரியம் அடையலா

காது. ஏனெனில் இவ்வித அற்ப நெசவு செய்து 27 லட்சம் வேலைக்காரர்கள் பவர் தறியோடு போட்டி போட்டு எதிர்த்து நிலைபெற்று நிற்பதால் நாட்டுத் தறியில் நெய்யப்படும் வகையெல்லாம் இல்லாமல் போகும்படி அழிப்பதற்கு பவர் தறிக்கு மிகவும் அசாத்தியமான காரியம். மேலும் அவ்வேலைக்காரர்களுக்குப் புதிய சாதகங்கள் செய்துவைத்தால் அவர்களின் தொழில் உலகத்தில் தலையெடுத்து முதன்மைபெற்று நிலைத்து நிற்குமென்பதில் சந்தேகம் ஒன்றுமில்லை. சராசரியில் நாளொன்றுக்கு ஒரு வேலைக்காரன் நெய்யும் 6 அடியிலிருந்து 6 கெஜம் நெய்யும்படி செய்விப்போமாயின் நாட்டுத்தறி பவர்தறியோடு போட்டியில் நிலைத்திருப்பதுமன்றி இங்கிலாந்தில் வஸ்திரம் நெய்வதில் பேர்பெற்ற நகரமாகிய மான்செஸ்டர் நின்று ஏற்றுமதியாகி இந்தியாவில் இறக்குமதியாகும் வஸ்திரத்தின் அளவைவிட மிகுதியாக நெய்யவும் கூடும். அப்படி அடைவதற்கு நாம் நெய்யும் வேகத்தை அதிகப்படுத்தவேண்டும். அதாவது ஒரு நிமிஷத்திற்கு 80 அல்லது 100 தடவை நாடாவானது தறியில் ஓடும்படி செய்யவேண்டும். அவ்விதம் நாடா ஓடக்கூடிய தறிகளைக் குறைந்த விலைக்கு நம்தேசத்து வேலைக்காரர்கள் வாங்கும்படி செய்துவிட்டால் காரியம் கைகூடி வருமென்பது திண்ணம்.

### (7) ஆங்கிலேயர்களின் பறக்கும் நாடா.

கி. பி. 1738-ம் வருஷம் வரையிலும் ஆங்கிலேயர்களின் கைத்தறிகள் தற்காலத்தில் இந்தியாவின் கைத்தறிகள் என்னமாதிரியாகவிருக்கின்றனவோ அதேமாதிரியாகவிருந்தன. அவைகளுக்கும் மூன்றுவித அசைவுகள் உண்டு. (1) இருகால்களும் மிதிகளை மாறி மாறி மிதிப்பதால் வடிகளில் ஒன்று அல்லது ஒரு அடுக்கு இறங்கும். மற்றொன்று அல்லது மற்றொரு அடுக்கு ஏறும். இப்படி மிதிப்பதால் பாவுநூல் இரு கூறுகப்பிரிந்து இடைவெளியுடையதாகும். (2) குறுக்கு நூல் போடுவதற்கு ஒரு ஓரத்தினின்று வேலைசெய்கிறவன் அவ்விடைவெளியின் வழியாக நாடாவை ஒருகையால் எறிவான். (3) நாடாவினால் ஒருபக்கத்தினின்று பாவுநூல் வழியாக மற்றொரு பக்கத்துக்குக் கொண்டுவரப்பட்ட நூலை நெருக்கும் பொருட்டு அவ்வேலைக்காரன் நெசவு அச்சை அதே கையால் அடிப்பான். அவனுடைய மற்றொரு கை மறு பக்கத்தில் வந்த நாடாவைக் கீழேவிழாமல் பிடித்துக்கொள்ளும். இதேமாதிரி மற்றொரு கால் மிதிக்கும்போது

பாவு நூலில் உண்டான இடைவழியாக அந்நாடாவை அந்தக்கை எறிய மறுபக்கத்தில் வந்தவுடன் மற்றொரு கை அதைப்பிடித்துக்கொள்ளும். நாடாவை எறிந்தகை நெசவு அச்சை அடிக்கும். இம்மாதிரியாக கைகள் நாடாவை எறிவதிலும் உடனே நெசவு அச்சை அடிப்பதிலும் உபயோகிக்கவேண்டியபடியால் காலதாமசம் ஏற்படுகின்றது. சராசரியில் ஒரு நிமிஷத்திற்கு நாடாவை 25 தடவைக்குமேல் செலுத்தமுடியவில்லை. இப்பொழுது இந்தியாவிலும் அதேமாதிரிதான் இருக்கிறது. கி. பி. 1738 ம் வருஷத்தில் ஜான் கே என்பவர் பறக்கு நாடாத்தறியை நிருமித்தார். அத்தறியில் நிமிஷத்திற்கு 60 தடவை நாடா ஓடுவதால் சாதாரணமான நாட்டுத்தறியில் நடக்கும் வேலையைவிட இரட்டிப்புக்குமேல் நடந்தேறியது. இங்கிலாந்தில் இதினாலுண்டான விபத்து அவ்விடத்தில் கைத்தறி இல்லாமலேயே அழிந்துபோய்விட்டது. அப்புதிய தறியில் வேலைக்காரர்கள் வேகமாக நெய்ய ஆரம்பித்ததால் நூல் அதிகம் வேண்டியிருந்தது. தறிக்குவேண்டிய நூல்களைத் தரும்பொருட்டு நூர்க்கும் புதிய யந்திரங்களைக் கண்டு பிடித்தார்கள். புதிய யந்திரங்களால் நூற்கப்பட்ட நூல் மிகுதிப்படவே பறக்குநாடாத்தறிகளால் நெய்யப்பட்டது போக ஜாஸ்தியான நூல்மிகவும் மிகுந்து போய்விட்டது. நூல் மிகுந்து போகாமலிருப்பதற்கு வேறு நூதன பவர்தறிகளை நிருமித்தார்கள். அவைகளில் ஒரு நிமிஷத்திற்கு நாடா நூற்றுக்கணக்காய் ஓடியும் பாவு நூல் தயார் செய்வதிலும் கஞ்சி போடுவதிலும் காலதாமசம் ஆகிறபடியால் அதிகம் நெய்யப்படாமையை அறிந்தார்கள். பவர்தறியின் முழுப்பிரயோஜனத்தையும் அடையக்கருதி அவர்கள் பாவு தயார்செய்வதற்கும் கஞ்சிபோட்டு பாவுமரத்தில் இலகுவாகப் பாவைச் சுற்றுவதற்கும் யந்திரம் ஒன்றை அமைத்தார்கள். அவ்விதமாக ஒன்று அமைந்த பிறகுதான் பவர்தறிகள் மிக அதிவேகமாய் நெய்யத் தலைப்பட்டன. கைத்தறி ஒன்றுகூட இல்லாமல் அழிந்துபோவதற்கு அதுவே காரணம். ஆயினும் இங்கிலாந்தில் நூதன தறிகள் மிகவும் ஏற்பட்டமையால் அந்நாட்டிற்கு அதிக லாபத்தையே தந்தது.

## (8) இந்தியாவிலுள்ள பறக்கும் நாடாத்தறிகள்.

இந்தியாவிலுள்ள பறக்கும் நாடாத்தறிகளின் நிலைமை மிக வேறுபாடு உள்ளவைகளாக இருக்கின்றன. இந்தியாவில் கைத்

## இந்தியாவில் உப[illegible]கித்துவரும் தறி[illegible]

தறிகளால் அதிக வஸ்திரம் செய்யக்கூடுமென்பதும் அவைகளில் வேலை செய்பவர்களுக்கு அதிக லாபத்தைக் கொடுக்குமென்பதும் என்னுடைய அபிப்பிராயம். அது எப்படி அடையக்கூடுமென்பதை அறிய [illegible] நூற்கப்பட்டது முதல் [illegible] ஆகும் வரையில் [illegible]டும் பலவித முறைமைகளைக் கவனித்தல் வேண்டும். ஒரு அற்ப உபாயத்தைக்கொண்ட ஒரு வஸ்திரம் செய்பவன் வசத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதை அவன் தன் தறியில் உபயோகிப்பதால் ஒரு நிமிஷத்திற்கு 100 முதல் 120 தடவை தறியில் நாடாவை ஓடும்படி செய்[illegible]. அவன் செய்யும் வஸ்திரத்தின் அகலம் 4 அடி இருந்தால் ஒரு நிமிஷத்திற்கு 160 கெஜம் நீளமுள்ள நூலை நாடா வேண்டியிருக்கும். ஆதலால் அவன் 1½ நிமிஷத்திற்கு ஒருதடவை தன் நாடாவில் நூல் மாற்றும்படி நேரிடும். அப்படி அவன் மாற்றும் காலம் 15 நொடி ஆகும். அந்த நாடாக்களில் நூல்களை வைத்துக் கால்தாமதமின்றிக் கொடுக்க உதவி புரிவோர் இல்லாதபக்ஷத்தில் அவன் செய்யும் காலத்தின் ஆறில் ஒருபங்கு நாடா[illegible] செலுத்துவதில் கழிந்துவிடும். மேலும் அத்தறியில் வேலை செய்பவனுக்கு நூல் அதிகம் வேண்டி இருக்குமாதலால் சாதாரண கைராட்டினங்களைக்கொண்டு நூல் சுற்றிக்கொடுக்கும் ஒரு பெண்பிள்ளையால் கொடுத்து முடியாது. ஆதலால் அத்தறியின் முழுப் பிரயோசனத்தை அடையவேண்டுமானால் வேகமாக நூல் சுற்றக்கூடிய ஓர் யந்திரம் வேண்டியது மிகவும் அவசியம். இ[illegible] செய்வதால் சீக்கிரத்தில் பாவுநூல் வஸ்திரமாக செய்யப்படும். செய்வதற்கு பாவு இல்லாததால் தயார்செய்யப்பட்ட வேறுபாவு நூலை வடியிலும் அச்சிலும் கோக்கும்படி நேரிடுகிறது. ஆதலால் வஸ்திரம் செய்பவர்கள் வஸ்திரம் செய்வதற்கு ஏற்பட்ட காலத்தைவிட அதிகமான காலத்தை பாவு நூற்களைக் கோப்பதில் கழிக்கிறார்கள். அப்படி அவர்கள் அடிக்கடி கோத்து வாங்குவதில் காலம் கழிக்காமல் இருக்கவேண்டுமானால் நீளமான பாவு நூல்களை உபயோகப்படுத்தவேண்டும். அப்பாவின் நீளம் 200 300 கெஜங்களுக்குக் குறையாமலிருக்கவேண்டும். இவ்வளவு நீளமுள்ள பாவுதயார்செய்வதும் அவைகளை [illegible]த்துக் கருக்கிப்போடுவதும் பிறகு பாவு மரத்தில் அதைச்சுற்றுவதும் நம் நாட்டிலுள்ள நெசவு வேலைக்காரர்களுக்கு மிகவும் அசாத்தியமான காரியம். ஆதலால் அவ்விதம் பாவு தயார்செய்து கஞ்சி போடுவதற்கும் அதைப் பாவுமரத்தில் சுற்றுதற்கும் ஒரு கை யந்திரம் மிகவும் அவசியம்.

(இன்னும் வரும்)

**K.** இராமானுஜ ஐயங்கார்.

# கிண்டர் கார்ட்டன் அல்லது, குழந்தைப்பயிற்சி.

கிண்டர் கார்ட்டன் என்பது ஜெர்மானிய பாஷையில் குழந்தைகளை வளர்க்கவேண்டிய முறைமைப்படி வளர்ப்பதைக் குறிக்கும். இப்பயிற்சியில் பிரவர்த்திக்கும் போதகாசிரியர்கள் சிறு குழந்தைகளின் மனோதத்துவ தேகதத்துவ நிலைகளை நன்கு அறிந்து, அவற்றை ஒன்றிற்கொன்று வித்தியாசமின்றி சமமாய் வளரும்படி செய்து, மேற்கண்ட குழந்தைகள் மனிதர்களாகுங் காலத்தில் தம் தம் தொழில்களைச் சரிவரப் பற்றி சிருஷ்டிகர்த்தாவின் எண்ணத்தை நிறைவேற்றி, [illegible] உபயோகமுமுள்ள மனிதர்களாகக் காலங்கழிக்குமாறு செய்யக்கடமைப்பட்டவர்களாகிறார்கள். இத்துறையில் பாடுபட்டு தமது வாழ்நாளையெல்லாம் குழந்தைகள் பயிற்சிக்கென்றே செலவழித்த பாலபோதகர்களில் சிறந்தவராய ப்ரோபெல் (Froebel) என்பார் ஒருவர். சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாகண்டத்திலுள்ள ஜெர்மனி தேசத்தில் வசித்தவர். அவர் குழந்தைகளின் சுபாவ உணர்ச்சிகளை அறிந்து அவ்வுணர்ச்சிக்கு ஏற்றதான விளையாட்டுப் பொருள்கள் மூலமாய் அவர்களின் அறிவு விசாலத்தையும் சரீர வளர்ச்சியையும் தேடினார். இவ்விதம் அவர் ஏற்படுத்திய விளையாட்டுப்பொருள்களைக் கோடைகள் என்று கூறி அவைகள் ஒவ்வொன்றையும் உபயோகிக்கையில் குழந்தைகள் தமது ஐம்புலன்களின் வழியாய் விஷயங்களைத் தாமே அறிந்துகொள்ளும்படியாய்ப் போதித்தார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து அவயவங்களும் அறிவை விருத்திசெய்யக்கூடிய ஐந்து வாசற்படிகளெனச் சொல்லப்படும். இவற்றையே பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்னும் உணர்ச்சிகளை அறியக்கூடிய ஐம்புலன்களெனச் சொல்லுகிறோம். ஒரு குழந்தையிடத்தில் ஏதாவது ஒரு நூதனப்பொருளைக் கொடுத்தால் அக்குழந்தையானது அதைத் தன் கையால் தடவியும், வாயில் போட்டு ருசிபார்த்தும், ஊதியும், கண்ணால் உற்றுப்பார்த்தும், மூக்கில் முகர்ந்தும், சப்திக்

கக் கூடியதனால் தட்டிப்பார்த்து காதால் கேட்டும், இவ்விதம் அப்பொருளுக்குரிய சகல குணங்களையும், தனது ஐம்புலன்களால் அறிந்துகொள்ளுகிறது. இவ்விதப் பரீட்சைகளில், பொருள்களின் உடையக்கூடியவையானால் உடைத்தும், கிழியக்கூடியவையானால் கிழித்தும் உள்ளிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயலுகிறது. குழந்தைகளின் இச்சுபாவத்திற்கு வெறுப்படையாமல் அவர்களின் அறிவை எந்தெந்த விஷயங்களில் விருத்திசெய்ய விரும்புகிறோமோ அவைகளுக்குத் தக்க பொருள்களைக் கொடுத்து அதன்மூலமாய் அறிவைப்புகட்டித் திருப்திசெய்யவேண்டியது பாலபோதகர் ஒவ்வொருவரின் கடமையாகும். மேற்கூறிய ஐந்து அவயவங்களில் கண், கை ஆகிய இரண்டும் மற்றவைகளிலும் சிறந்தவை. இவைகளின் மூலமாய் குழந்தைகளின் சுபாவ உணர்ச்சிகளாகிய மேல்கூறப்பட்டவைகளைத் திருப்திசெய்து அறிவைப் புகட்டுவதே கிண்டர் கார்ட்டனின் முக்கிய கொள்கையாம்.

குழந்தைகளின் சுபாவ உணர்ச்சிகளில் சில வருமாறு:—

1. சுறுசுறுப்பாயிருப்பதில் பிரீதி.

2 நூதன விஷயங்களை அறிவதில் ஆசை.

3. அறிவை விருத்திசெய்வதில் இச்சை.

4. அனுகரணசக்தி. அதாவது ஒருவர் செய்வதைப்பார்த்துத் தானும் அவ்வாறு செய்வது.

5. பாவனாசக்தி. அதாவது ஒரு சிறு விஷயத்தைப்பற்றிச் சொன்னால் மனதால் பாவித்துக்கொள்ளும் திறமை; சிறு கதை முதலியன.

6 உபயோகமுள்ள காரியங்கள் செய்வதில் ஆசை.

7. இரஸஞானம்:—அதாவது அழகுள்ள ரூபங்களிலும், வர்ணங்களிலும், பாட்டுகளிலும் உண்டாகும் ஆனந்தம்.

8. அனுதாபம்:—பிறருடைய சுகதுக்கங்களை அறிந்து அதற்குத் தக்கவாறு நடத்தல்.

மானிடஜென்மம் பெற்ற ஆண், பெண், அனைவர்க்கும் நல்லொழுக்கமும் யோக்கியதையும் அவசியமென்பது அனைவரும் அறிந்ததே. இவற்றை அடைவதற்கு அவசியமானது கல்வி. இக்கல்வியை நன்றாய்க் கற்றவர்கள் ஞானக்கண் பெற்றவரெனக் கூறப்படுவர். இது நோக்கியே ஔவையார் "எண்ணுமெழுத்தும்

கண்ணென்தகும்" என்றும் திருவள்ளுவநாயனார் "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்றும் கூறியிருக்கிறார்கள். இவ்விதக்கல்வியைப் பெற்றவர் முகக்கண் இரண்டுடன் அகக்கண்ணாகிய மூன்றாவது கண் பெற்று முக்கண்ணனாகிய பரமசிவனுக்கு ஒப்பான கடவுள் தன்மையுடையவர் ஆவார் எனச் சொல்வதும் சால்பே. மேலும் இக்கல்வியானது இகபர சாதகமாகிய "அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்" என நீதிநெறிவிளக்கத்தில் கூறுவதும் அனைவர்க்கும் தெரிந்ததே. இத்தகைய தெய்வீக மகிமைபெற்ற கல்வியின் உறுப்புகளாகிய எண்ணையும், எழுத்தையும், பிரதம சிட்சையாகப் போதிக்க ஆரம்பிக்கையில் வழி த[illegible]ன்றி [illegible]ண்டவர்கள் கண்டபடி சொல்லத்துணிதல் மிகவும் [illegible]க்கத் தக்கது.

இவ்வித கருத்துக்களைக் கண்டுபிடிப்பதில் மேற்சொன்ன பிரோபெல் என்பவர் பிரதமசிட்சையாகப் போதிக்கவேண்டிய எண் அதாவது கணிதநூல், எழுத்து அதாவது வாசித்தல் எழுதுதல் ஆகிய பள்ளிக்கூடங்களில் கற்கவேண்டிய அனைத்தையும் விளையாட்டாகச் சிறிது சிறிதாக, கஷ்டமென்பதே கொஞ்சமேனும் தோன்றாமல், பிள்ளைகள் அறிந்துகொள்ளும்பொருட்டுக் கையாடிய பாலபோதனை முறைக்குக் கிண்டர் கார்ட்டன் முறை யென்று பெயர். இம்முறைப்படி பாடசாலைகளில் படிக்கும் பாலர்களுக்கு வித்தியா விசாரணை சட்டப்படி ஏற்பட்டிருக்கும் கட்டாயமான பாடங்களையும் இஷ்டமான பாடங்கள் அனைத்தையும் போதிக்கலாம். இப்படிக்கன்றி நமது நாட்டு உபாத்தியாயர்களில் அநேகர் கிண்டர் கார்ட்டன் என்பது ஒரு தனிப்பாடமென்றும் அது மிகவும் கடினமானதென்றும் போதிப்பது கஷ்டமென்றும் வீணே நினைத்துப் பிரமிக்கிறார்கள். கிண்டர்கார்ட்டன் என்னும் பதத்தின் பொருளைச் சற்று யோசித்துப்பார்ப்பவர்களுக்கு இது தனிப்பாடமல்லவென்றும் அம்முறைகளை விவரித்திருக்கும் அநேக ஆங்கிலேய புத்தகங்களைப்பார்த்தால், அவை மற்ற போதனைமுறைகளிலும் மிகச் சிறந்தவை யென்றும், எளிதானவையென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விசதமாகும்.

நிற்க: கிண்டர் கார்ட்டன் முறை மேனாட்டார்க்கே (ஐரோப்பா கண்டத்தவர்) உரித்தானதும் தேவையானதுமென்றும் நமது நாட்டிற்கு அனாவசியமென்றும் கொள்கையுள்ளார் நம்மில் சிலர்

ஊளர். இதற்குக் காரணம் கிண்டர் கார்ட்டன் என்பதைத் தனிப்பாடமாகவே கருதுவதேயாம். அப்படியின்றி பிரதமசிட்சையாகிய பாலபோதனை முறையைக் குறிப்பது கிண்டர் கார்ட்டன் எனத் தெரிந்தவளவில், அது அவசியமென்றே நமது நாட்டார் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆங்கிலநாட்டுப் பிள்ளைகள் மூன்றாவது வயது முடிந்தவுடனே பாடசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். நமது நாட்டிலோ ஐந்தாவது வயது பிறந்த பிறகுதான் அட்சராப்பியாசத்திற்கு ஆரம்பிக்கிறார்கள். இவ்வித வயது வித்தியாசத்தால் ஒருவயதிற்கு ஏற்பட்ட முறை மற்றொரு வயதிற்கு ஒவ்வாதெனச் சிலர் அபிப்பிராயப்படலாம். இது சிறிதளவு நியாயமானதாகத் தோன்றினாலும் நமது நாட்டில் தற்காலத்தில் பாலபோதனைக்குத் தகுந்த முறை ஒன்றும் ஒழுங்காக இல்லாமையாலும், மேனாட்டு முறை மிகத் தேர்ந்தவர்களால் சரியானவழியில் வரன்முறையாய் ஏற்படுத்தப்பட்டிருப்பதாலும், அவற்றை நமது ஐந்துவயது சிறுவர்களும் சிறுமிகளும் மூன்று வயதுள்ளவர்கள் கற்றுக்கொள்ளும் காலத்திலும் அதிசீக்கிரத்தில் பயிலக்கூடுமாதலாலும், நாமும் அதை அனுஷ்டிக்கத் தக்கது.

அப்படிக்காயின் நமது நாட்டுப்பிள்ளைகளையும் மேனாட்டாரைப்போல் மூன்றுவயதானவுடன் பாடசாலைகளில் வைக்கக் கூடாதெனின் அதற்கு அநேக இடையூறுகள் இருக்கின்றன. மூன்றுவயதுக் குழந்தைகளைப் பிரியமாய்ப் பாதுகாத்து அன்புடன் வளர்க்கத்தகுந்தவர்கள் ஸ்திரீகளேயொழிய ஆடவர் அல்லரென்பது அனைவரும் ஒத்துக்கொள்ளத் தகுந்தது. அவ்வித பாலபோதகா விருத்தியில் அமரவேண்டிய ஸ்திரீகள் அளவு கடந்த படிப்புள்ளவர்களா யிருக்கவேண்டியது அவசியம். பெண்கல்வி என்பதே இந்நாட்டில் இன்னும் பரவவில்லை என்பதும், ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் பெண் பாடசாலைகளில் படிக்கும் சிறுமிகள் அரைகுறைப் படிப்பைக்கற்று இவ்வரிய பாலபோதனைசிரிய ஸ்தானத்தை வகிக்க அனர்கர்களா யிருக்கிறார்களென்பதும் அத்தி பூத்தாற்போல இவள்தான் சரஸ்வதியோ என விளங்கும் சில மாதசிரோமணிகள் இவ்வித போதனையுத்தியோகத்தில் அமர்தல் இந்திய ஸ்திரீகளுடைய தன்மைக்கு ஒத்ததல்லவென்று இத்தொழிலைப் பிரவர்த்திக்க அச்சப்படுகிறார்களென்பதும், அநேகர் அறிந்தவிஷயமே. இத்துடன் மூன்றுவயது

பிள்ளைகளும் படிக்கக்கூடிய மேனாட்டு கிண்டர் கார்ட்டன் பாட சாலை ஏற்பாடுகள் முதலியன அமைக்கப்பெற்ற பாடசாலைகளும் சாமான்களும் உபகரணங்களும் நம்தேசத்தில் இல்லை. மேலும் அட்சராப்பியாசத்திற்கு ஐந்தாம் வயது தகுந்ததென்று ஆன் றோர்களால் ஏற்படுத்தப்பட்டுத் தொன்றுதொட்டு வழங்கிவரும் ஒரு வழக்கத்தை மாற்றுவதும் சுலபமல்ல. அன்றியும் இளம்பிரா யத்திலேயே பிள்ளைகளைப் பாடசாலைகளில் விடுவதனால் அவர்கள் அப்பாடசாலையின் சட்டதிட்ட நியமங்களுக்கு உட்பட்டு, சுயேச்சையாய்த் திரிந்து விளையாடுவதனால் உண்டாகும் சரீர வளர்ச்சி குறைந்து, பலவீனர்களாய்ச் சிறுவயதில் மரணமடைகி றார்களென்பது சில சரீரசாஸ்திரிகளின் கொள்கை. இக் கோட்பாடுடையோர் ஏழாவது வயதை அட்சராப்பியாசத்திற்கு மிகத் தகுந்த காலமென்று கூறுவர். இத்தகைய ஏற்பாடு அனுஷ் டானத்திற்கு வருமாயின் நமது தேசத்தில் படித்தவர்கள் அநே கருக்கு [illegible] வெகுவாய்க் குறையு மென்பதற்கு ஆக்ஷேபம் இல்லை. ஆதலால் அட்சராப்பியாஸகா லநிர்ணயத்தைப் [illegible] த்தையே வைத்துக்கொண்டு அக்காலத்தில் [illegible] ருசிக்கதான உருக்கட்டிட [illegible] களைக் கையாளுவதானால் அறிவுடையோர் தன்மையாதலின், ஐரோப்பா இக்கிண்டர் கார்ட்டன் முறையை அனுசரிப்பது நலமாயினும் [illegible] புதியன புகுதல் காலமாறுதல்களுக்கும் விருத்திக்கும் அவசியமென்பது புத்தி மான்கள் கொள்கை.

இது நிற்க, சகல சாஸ்திரங்களுக்கும், வித்தைகளுக்கும் தாயிடமான நமது நாட்டில் இதுவரையில் இவ்வித கிண்டர்கார் ட்டன் முறையே இல்லாமலிருந்ததும். அப்படிக்கில்லாவிடின் ஆதிகாலத்தில் மிகத் தேர்ந்த பண்டிதர்களும், கவிகளும் கணித வான தார்க்கிக சாஸ்திரிகளும் இந்நாட்டில் எப்படி உண்டானா களென்றும் கேட்டால், கிண்டர்கார்ட்டன் என்னும் பெயர் மாத் திரம் இல்லையே யொழிய மிகத் தேர்ந்த பாலபோதனை முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கவேண்டுமென்பதற்குச் சிறிதளவும் சந்தேகமில்லை. ஆனால் அவைகளை நமது முன்னோர்கள் ஒரு காவிய மாகவோ, கிரந்தமாகவோ திரட்டிச் சேர்த்துவைக்காமையாலும், மத்திய காலங்களில் நேர்ந்த மகம்மதியர் முதலிய அன்னிய இராஜ்யாதிகார குழப்பங்களாலும் அவையெல்லாம்சிதறிக் கெட்டுச்

சிதைவுண்டு தாறுமாறாகி நம்மால் இப்பொழுது கண்டுகொள்ள
முடியாமலிருக்கின்றன. ஆயினும் நமது கிராமாந்தரத் திண்ணை
[illegible]ளிக்கூடங்களில் இன்றைக்கும் நடை பெற்றுவரும் சில
அடைகுறிகளை உற்றுப்பார்க்கின், இவ்வித கிண்டர்கார்ண்டன்
முறை நவீனமல்ல[illegible]றும் பழைமைமாகவே இருந்திருக்கவேண்
டுமென்றும் யூகிக்கக்கூடியதாகிறது. எப்படியெனின் மேற்கண்
ட திண்ணைப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் காலையில் ஒரு குறிப்பி
ட்ட காலத்தில் [illegible] அரு, [illegible], ஏரியோ, கால்
வாயோ, அல்லது [illegible] தம்மக் கண்ணீர் நிலையோ அதற்
குப் பல்விளக்க[illegible] ஒழுங்காய்ப் பாட்டுப்பாடிக்கொண்டு
போதலும், [illegible] கொள்ளுக்குள் சென்று பாட்
டென் [illegible] கிண்டர்கார்ட்டன்
அன்றி வேறென்ன? [illegible] பாடசா
லையை அழகு செய்[illegible] குறித்துமுதலி
யவைகள் [illegible], இனி, தாம
ரைப்பூ முதலிய [illegible] வாழைமட்
டையால் [illegible] பின்னுவதும்,
மகர் நோன்பு [illegible] சகர்த்திய
ன்று [illegible]
யார் பிடிப்பது, [illegible] எல்லாம் விடு
வீடாய்ப் பாடிக்கொண்டு [illegible] வாங்குவதும், வா
ழை இலையில் [illegible] கல்யாணங்கள்,
சமாராதனைகள் முதலிய [illegible] போஜனபாத்திரங்க
ளுக்காகச் சொந்தக்காரர்கள் [illegible] கொடுக்கும் ஆலிலை
கள் முதலியவற்றைத் தைப்பதும் இவைபோன்ற இன்
னும் அநேக விஷயங்களெல்லாம் கிண்டர்கார்ட்டன் அன்றி
வேறென்ன? காலவேறுபாட்டிற்குத் தக்கவாறு மனிதர்களின்
தேவைகளும் அவசியங்களும் வித்தியாசப்படுகின்றனவாதலால்
அவற்றிற்குத்தக்க சீர்திருத்தங்களையும், மாறுதல்களையும் அறி
வுள்ளோர் அமைத்துக்கொள்ளவேண்டியது கடமையல்லவா?
நமது நகரங்களிலும் பட்டணங்களிலும் தற்காலத்தில் தலைமை
வகித்த அநேக சுதேசாபிமானிகள் சுதேசியத்தைப்பற்றி வெகு
வாக உபந்நியாசமேடைகளில் நின்று பிரசங்கிக்கிறார்களேயொ
ழிய எல்லாவிதக் கைத்தொழில்களுக்கும் ஆதாரப்பழக்கமும்
அஸ்திபாரமுமான கிண்டர்கார்ட்டன் முறையை நடத்தப் பார்ப்போ

தரிசாலைகளில் ஆங்காங்கு ஸ்தாபித்து விதைத்துவிட்டால் சுதேசியகைத்தொழில் மரங்கள் சீக்கிரத்தில் தழைத்தோங்கி வளருமென்பதை இன்னும் கருதினரில்லை போலும்.

(இன்னும் வரும்)

கோபால ஐயங்கார்.

---

# தொல்காப்பியப் பாயிரவிருத்திப் பரிசோதனை.

---

## மறுப்பு நிராகரணம்.

(148-ம் பக்கத்தொடர்ச்சி).

துன்னூசியினிது செல்லுமென்பதில் துன்னென்னு மடைகாதற்றலூசி முதலியவினத்தை விலக்கி துன்னலூசியைச் சுட்டிக் காட்டியதென்றனர். செல்லுமென்னும் வினையொன்றே காரணமாவூசியை யுணர்த்தினமையால் துன்னென்னு மொழியுணர்த்தியது. இருமொழியுமதை யுணர்த்தினவென்பின் வாளாக் கூறினரென மேலைக்குக் குறிப்பானமையை நாட்டிடாதலால், துன்னென்னு மொழி தைத்தலென்னும் பொருள்பட்டுக் கூறைமுதலியன தைக்கும் ஊசியையொத்த நன்பொருளை யுணர்த்தினமையான வா கூறியவுவமம் போலியாயிற்று.

திருவிளையாடற் புராணம் இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலத்தில், பரிவாரன் மொழிதொடுத்து வருணித்தோர்க்குப் பயன்றராத கடல்முதலியவினவைக் கூறியிருப்பதை முடிதுளக்காதஉற்று வமித்திருப்பதாகவும் திருநகரப்படலம் 24-வது செய்யுளெனப் போடப்படவேண்டியது 72-வது செய்யுளெனப் போட்டிருப்பதை யச்சுத்தவறெனவும் நினைக்கமுடியாத நண்பர் கோல்போன்ற கோல்என வெழுதப்பட்டது அச்சுத்தவறால் பாறிவிழுந்திருப்பதை யறியவெனக்குப் புத்தியில்லையெனக் குறிப்பாகவுங் கூறினர். இதனைற்றய மிழுக்கு நோக்க வறியாரென்றும், கற்றூர்க்குக் கண்போன்ற திருவிளையாடலைத் திருக்கண் சாத்தியுந் திருச்செவியுற்றுந் தெரிந்திலரென்பதுந் தானேபோத

ரும். ன்னூலையும் பார்த்துணராதார் பழையவரிய பெரிய நூலாகிய தொல்காப்பியத்திற்கு வடமொழிக்கடலையுந் தென்மொழிக்கடலையு நிலைகண்டுணர்ந்த ஆன்றோராக்கியவுரையைக் கண்டிக்கப் புகுந்தது "விண்ணிலாதவன் விளங்கு நீடெல்லையையுமண், கண்ணிலாதவன் கேட்டலுங்காண்டலுங் கடுக்கும்."

பொய்யடிமையில்லாத புலவராலும், ஏனைமகாவித்வான்களாலும் இயற்றப்பட்ட பத்துப்பாட்டு, புறநானூறு, சிந்தாமணி முதலிய நூல்களில் படலெனவும் முடமெனவுங்கூறிய பதங்கட்கு நச்சினார்க்கினியர் முற்பட்டவுரையாசிரியர்களாற் கருக்குமட்டை வினைவு எனவெழுதியவுரையை, மகாவித்வான் மகாமஹோபாத்தியாயர் ஸ்ரீமத் சாமிநாதய்யரவர்கள் அச்சிட்டும் அவ்வச்சிற்குறிப்புரை யெழுதியுமப்பதத்தை யவர்க்கறியாமை நாட்டி மறுத்த நண்பர், தியாகராஜ லீலையின் முன்னூசி கலப்பையினுறுப்பெனக்குறிப்புரை யெழுதியிருப்பதை யெடுத்துக்காட்டியவர்களுக்கு மகாமஹோபாத்தியாயப்பட்டத்தை நிலை நாட்டினர்.

இவை நிற்க; நான் பரிசோதனையிற்கூறிய விடயங்களுள் முக்கியமானவையிரண்டு. அவையாவன; தந்தம் மங்கலமொழியின்று, கொழுவுந்துன்னூசியும் வெவ்வேறு பொருளையுணர்த்தி நின்றனவென்பதே. அவற்றுள் தந்தம் இயல்பாய் மங்கலமன்று. மங்கல மொழியாகிய நன்றொடு புணர்ந்து தானு மங்கலமாயிற்றென்றனர். வேதியனொடு நீசன் புணரின், வேதியனீசனுவதன்றி, நீசன் வேதியனாவதில்லை. இது தோதட நூற்றுணிவு. விருத்தியிற்கொழுவுந்துன்னூசியு மொருபொருளெனவுரைத்தவர் ஒரு குற்றத்தை மறைக்கப் பொய்சொல்லி யிரண்டு குற்றத்திற்குட்படுபவர் போல வச்சுத்தவறெனவுங்கூறி யிருபொருளெனவும் ஒப்பினர். சோதனைமறுப்பிற்குநுண்மைப்புலவரெனவும் எனக்குப்போலிப்புலமையையேற்றியும் வரைந்திருக்கின்றனர். நுண்ணறிவுள்ள கல்விமான்களிவற்றைச்சோதனை செய்து சரியான தீர்மான மளிக்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

கோவிந்தசாமிச்சோழகர்.

---

# பாயிரவிருத்திப் பரிசோதனை.

(21-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிறப்புப்பாயிரத்துக்குவமமாக, 'மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக் கோபுரமு—மாடமைத்தோணல்லார்க் கணியும் போல்' என நன்னூலார் கூறிய செய்யுளுக்குச் சித்திரமோவியமெனவும், கோபுர மாடமெனவும், அணி பொன் முதலியதாதுக்களாற் பொற்கொல்லர்செய்தபணியெனவுமாறுபொருளமைத்துச் சித்திரமில்வழி மாடமும், கோபுரமில்வழி நகரும், அணியில்வழி நல்லாருமிருப்பதுபோலப் பாயிரமில்வழி நூலின்மையாற் கூறிய செய்யுள் பொருத்தமன்றெனமறுத்து, எஞ்ஞான்றும் ஒருப்படித்தாக வாகாயத்தை விளக்கலாற்பானுவும், குலமகட் கணியினுமின்றியமையாதிருத்தலானாடையும், கணவன் கற்பித்தவழி நிற்றலாற்கற்புடையவளும் பாயிரத்துக்குவமமெனவும் கூறினர். இரவிலருக்கனின்றிவிசும்பும், துறவு முதலியவற்றிலாடையின்றி மகளிரும், ஊடலிற் கணவன் கற்பித்தவழி நடவாத கற்புடையவளும் இருப்பதுபோலப் பாயிரமில்வழி நூலாமெனப்பட்டு முன்னோர் கருத்தொடு முரணாதலாலிப்பொருளும் பொருத்தமன்று.

நன்னூல் மூலஞ்செய்தவர் பவணந்திமுனிவர். அதற்குரை செய்தவர் பிற்றோன்றியபலர். அவருட் சமீபகாலத்திற் புதுக்கியவர் புலவர்பெருமான் ஸ்ரீமத். ஆறுமுகநாவலர். அவரும் இச்செய்யுள் பாயிரத்துக்குப் பொருந்தாமையையறியாது கூறினரென வெளியிட்டுக் கூறாது நன்னூலார் முதலாயினரெனக்குறிப்பாகக்கூறினர். அச்செய்யுட்கருத்தும் முறையாசிரியர் கருத்துமறிந்திலர். அக்கருத்தையறிந்து கூற நான் பற்றுதவனாயினும் அவர்கடிருவடியைத்தியானஞ் செய்து, 'தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினுமவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவ' ரெனவும், 'இமையப்பொருப்பகஞ் சேர்ந்த பொல்லாக்கருங்காக்கையும் பொன்னிறமாயிருக்கும்,' எனவும் பெரியோர் கூறிய வாக்கியப்படி தியானவிசேடத் தாலுண்டான வறிவினாற்றெரிவிப்பல். சித்திரம்-அழகு. கோபுரம்-நகருட் செல்லும்வழி, அணி-பெண்கட் கணிகலமாகிய நாண்முதலிய குணங்கள். அழகின்றி மாடமும், வழியின்றி நகரும், நாணமுதலிய பண்பின்றி மகளிருமின்மைபோலப் பாயிரமின்றி நூலின்மையை யுணர்த்தின. சித்திர மழகென்ப

[illegible], கோபுரம் [illegible] செல்லும் வழியென்பதும் வெளிப்படை. அணி அணிகற்குணமென்பது, 'பொறையெனப்படுவதாடவர் தமக்குப் பூண்'; எனவும்; 'நறைமலர்க்குழலார் தமக்கு நாணமே நலன் செய்பூண்' எனவும்; 'உயிரினைத் துறந்து மான்பூணும் மானமே' எனவும்; 'அணியன்றோ சான்றோர்க்கு நாணுடைமை' எனவும்; 'பணிவுடைய னின்சொல்ல னாதலணி,' எனவும் ஆன்றோர் கூறியிருக்கின்றமையால் நன்னூலார் கூறிய வெண்பாப் பொருத்தமுடையதேயன்றி யிவர் கூறியதே போலியாயிற்று.

ஈவான்றன்மை யென்பதாசிரியன்றன்மை. ஈதற்றொழினைடைபெறவேண்டி யிரப்போர் வேண்டும். பொருளுமிரக்க முதலிய குணனு மீவோருக்கின்றியமையாதிருத்தல் வேண்டுமெனவுங் கூறினர். இரக்கமும் பொருளுங் காரணம். ஈதல் காரியம். அதையேது வின்றி மாற்றியிருப்பது தவறு.

பிணி, கல்லாமை, சினம், பிணக்கு, முதலிய குற்றங்களிலொன்றிருப்பின் வன் மாணாக்கனுக்காகாதென விலக்கியிருக்க, விம்மையி லழிக்கூடிய வாழ்க்கைக்குத் துன்புறுத்து நோய் போலாது எழுமையுந் தொடர்ந்து நன்மை பயப்பனவாகிய மானம், குலம், கல்வி, முதலிய நன்மைகளை யழிக்குந் தீப்பிணியாகிய பசியையும், நகரப்பிவனகூட்டில்லாத நல்குரவையும், இழிதொழிலாகிய விரத்தலையு முடைய முக்குற்றத்தனை மாணாக்கனுக்கும்; மாணாக்கனுக்காகாதார் பசித்திருப்பினு மளிப்பதும், மிகினுங்குறையினுந் நோய் செய்வதும், உண்ணவுண்ண வெறுப்புண்டாக்குவதும், உண்டபின் பிறருக்குப் பயனற்றதும், குறைவதும், உண்டபடியிருந்து கெடுவதுமாகிய வுணவைக், குற்றமற்றவர்க்களிக்கப்படுவதும்; மிகினுங் குறையினுந் தக்கப்பயன் றருவதும், கற்கக்கற்கத் தக்க விருப்பங் கொடுப்பதும், பெருகுவதும், பிறருக்குப்பயன்படுவதும், எழுமையுந் தொடர்ந்து நன்மை பயப்பதுமாகிய கல்விக்குத் தகவுற உவமித்திருக்கின்றனர் இவ்வுவமத்தையும் பொருளையும் எவ்வாறு சோதனை செய்து சம்பாவிதமசப்பா விதமெனக்கண்டு கூறினர்? இவற்றிற்குப் பிரமாணம் வெளிப்படை.

மடற்பனையென்பதற்கு நன்னூலார் கூறிய பொருள் தவறென்றும், மடலென்னு மடை காரினும் பெண்பனையை விலக்கி யச்சிறப்பற்ற வாண்பனையை புணர்த்திற்றென்னும், மடலென்பது பாளைக்கியற்பெயரென்றும், மட்டைக்குப்பெயரன்றென்றும்,

ஆகுபெயராகக் கொள்ளினதுவு மிவ்விடத்துக் கியையாமையானும், 'இனச்சுட்டியில்லா' வென்னுஞ் சூத்திர விதியான் மடல் பெண்பனையை விசேடித்து வாராதென்றுங் கூறினர். மடலூர்தலென்னுந் துறை காமுகர் பனைமடலான் மாப்பண்ணி யங்கத்தினூறுகைப்ப வதனேறி வீதியிற்செல்வதெனக் கூறுதலானும், அம்மடல்பாளையாயின் அஃதிக நுண்பொருளாகி யேராடவனைச் சுமந்து வீதியிற் சேறல் கூடாமையானும், பாளை தானே யழியுந்தன்மையுடைமையானும், மட்டை யொருவராலழிக்கப்படினழியுந் தன்மையுடைமையானும், புறநானூறு 29 வது செய்யுளுரையில் மடல்கருக்கெனக் கூறுதலானும், புறப்பொருள் வெண்பாமாலை 'பெருந்திணைப்படலம் 2-வது செய்யுளுரையில் வளைந்த பனைமடலாகிய குதிரையெனவும், சிந்தாமணி பதுமையாரிலம்பகம் 149-வது செய்யுளிலன்றிலிருக்கும் நாரையுடைய மடலெனவும், கோவையார்மடற்திறம் 77-வது செய்யுளிற் புட்கள் வசிக்கும் பனைமடலையழித்து மடற்பண்ணுவதெனவும் கூறுதலானும், தொல்காப்பியம்பொருளதிகாரம்மரபியல் 642-வது சூத்திரத்தில் மடலெனவும் பாளையெனவும் வெவ்வேறாகப்பிரித்துக் கூறுதலானும், மாவெனமடலூர்வவென வுதாரணங் காட்டியிருத்தலானும், பெரும்பாணாற்றுப்படையில் 'ஆற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல், வேற்றலை யன்னவைந் நுதி' யென்ற தொடருக்கு மடலினடி தன்னிடத்தே நிற்கமேலறுப்புண்டவீங்கெனவும், ஈந்திலையான் வேய்ந்தகுடிலெனவும் பொருட் கூறியிருப்பதானும், இலை மட்டையிடத்தன்றிப் பாளையிடத்தின்மையானும், 'மடலணி பெண்ணையீன்றமணிமருள் குரும்பை' யெனவும், கொழுமடற் பெண்ணையீன்றகுரும்பையெனவும், சிந்தாமணி சுரமஞ்சரியாரிலம்பகம் 59-வது செய்யுளினும், இலக்கணையாரிலம்பகம் 149-வது செய்யுளினும் கூறியமடல்கள் பாளையை விலக்கி மட்டையையுணர்த்திப் பெண்பனையை விசேடித்து நின்றலானும், நன்னூலாருரையுண்மையுரையே யன்றி யிவருரை போலியுரையாயிற்று. அன்றியுந் திருத்தக்கதேவர், சங்கப்புலவர், நச்சினார்க்கினியர் முதலியவான்றோரலாதவர்களா? அவர்களாலியற்றப்பட்டுரையெழுதப்பட்ட நூல்கள் போலிநூல்களா?

இவ்வாறன்றேல் மடலென்பது மட்டைக்கியற்பெயராயாளப்பட்டிருக்கின்றதே யன்றிப் பாளைக் கியற்பெயராக வோர் நூலிலுங் கண்டிலம். பிள்ளையவர்கள் இவ்வாறன்றி மாறுபடக்

கொண்ட தென்றாலி னுணர்ந்தோ? இடுதலு மேற்றலுமாகிய
சிறப்புப்பெற்றிபாளையின் உறப்புக்குக் கையெனப் பெயர் வந்த
தன்றி வேறுயாது காரணம் பற்றியோ வறிகிலம்.

முடத்தெங்கென்பது எனைத்தெங்கின் நெ[illegible]ல் ஞாயி
றின் ஒளிபடாமல் முடமாய ஓலையையும், முடமென்பது பிற
வுறுப்புக்களைத் தாங்கி நிற்றல் கூடாத காலது குறைவையுணர்த்தி
யாங்குப் பாளையினைக் குறைவையுணர்த்திய தெனவும், முடம்
வினைச்சொல்லாகாமையால் நன்னூலார் கொண்ட பொருள்
பொருத்த மன்றெனவும், 'முடந்தை நெல்லின் கழை,' 'முடமதி
யிலேச்சினன்,' என்பனவும் குறைவையே யுணர்த்தினவேயன்றி வளை
வை யுணர்த்தில வெனவும் கூறினர். அவ்வுரைத்த இலக்கணப்படி
யன்றி வளைவு முதலியன குன்றுமுடைத்தாய்ப் பிறவுறுப்புக்களைத்
தாங்கிப் பார்ப்பவருக்கு நகை விளைக்கத்தக்க விகாரச்செலவினை
யுடைய காலுக்கு முடமெனப்பெயர். தொல்காப்பியம் பொருள
திகாரம் மெய்ப்பாட்டியல் 249-வது சூத்திரம் நகைச்சுவை
யின் பொருளைப்பார்க்க. முடந்தை நெல்லென்பதில் முட
ந்தை நெற்கதிர் நிலைத்திற்றுப் படியுமமைதியறிந்து மள்ளர் நீர்
வறிதாக்குதல் மரபு. நாரை, மீன் முதலியனவுண்ணும் நீர்வாழ்
பறவை நீரற்ற விடத்திலிருந்து இரைகவர்தல் கூடாமையாலும், செந்
நெல் கன்னலாகவும் கன்னல் கமுகாகவும், கமுகு தெங்காகவும்
நாட்டின் வளத்தாற் கூறுவது இயல்பாதலாலும், செந்நெல் நாரை
யைத் தாங்கி நிற்ற லியல்பு. தாங்கின், அது வளைந்திருப்பினன்றி
நாரையிரை கவர்தல் கூடாமையால் இம்முடந்தை வளைவையுண
ர்த்தியதன்றிக் குறைவை யுணர்த்திலது. முடமதி யிலேச்சினன்
என்பதில் முடம் குறையெனின், பூவும் மணமும்போலப் பகுத்த
றியப்படாது எங்கும் நிறைந்த பூரணனாகிய சிவபெருமானது,
வேதத்தாலும் பிரமவிட்டுணுக்களாலும் அளந்தறியப்படாத
திருச்சிரத்தில் தக்கன் சாபக்குறைவை நிவர்த்தி செய்துகொண்டு
சிகாமணியாய், தான் வணங்கிய பிரமவிட்டுணு முதலிய பதினெ
ண்கணங்களுந் தன்னை வணங்க, அனவரதமும் பரமானந்தத்தை
அனுபவித்திருக்கும் மதி அரசர்களால் நிகளபந்தனஞ் செய்து
காராக்கிரகத்தில் அடைக்கப்பட்ட குற்றவாளிகள் போல் கு
றையை யடைந்து துன்புற்றிருக்குமென்னின் சிவபிரான் திருச்சி
ரம் சிறைச்சாலையா யிருத்தல் வேண்டும்; சரியை முதலிய
பாதங்களை யனுட்டித்து முத்தியடைய விரும்புமடியார் முடிவும்

அக்கடவுட்குப் பாத்துவங் கூறும் வேதாகமங்களின் கதியும் எவ்வாறோ? பொருந ராற்றுப்படை 62 பக்கத்தில் முடக் காஞ்சிக்கு வளைந்த காஞ்சியென நச்சினார்க்கினியர் அறியாது கூறினர் போல. முடமதி, முடங்குடங்கி, கூன்பிறை, கோணிய விளம்பிறை, முடக்கோடு, முடநாகம் எனத் திருவிளையாடல், காசிகாண்டம், பாரதம் முதலிய நூல்களிற் கூறியிருப்பதற்கு வளைவன்றி வேறுபொருள் யாதோ? பிள்ளையவர்கள் இந்நூலாசிரியர்கள் தம்மளவு கல்வி கேள்வி யுடையவர்களலர் என நினைத்தார்போலும்.

மதுக்கூர், கோவிந்தசாமிச் சோழகர்.

---

# மனைவி குணியாயிற் கணவன் வளவனே.

பெண்டாட்டி நற்குணநற்செய்கை யுடையவளாயின் கொண்டவன் கோமகச்சுவரனாவான் என்பது இத்தலைப்பின் கருத்தென்றறியாதாரிரார். இதன் உண்மையைக் கைக்கனிபோற் காட்டிய சீமாட்டி ஒருத்தியுண்டு. அவள் ஆங்கிலதேயத்தவள். மரியாள் என்னும் அரிய பெயர் பூண்டவள். அப்பெயருக்கு அவர்கள் பாஷையில் யாதுபொருளாயினும், நமது தமிழ் மொழியில் "சாகாதவள்" என்று பொருள். அப்பெயர்க்கு இப்பொருட் பொருத்தம் போகப்போகக்காணலாம். இவள் டால்மோரால் என்னும் ஊரில் பிறந்தவள் இவ்வூர் சிறிய ஊராயினும் இதன் சீர் பெரியது என்று காட்டப் பன்னிப்பன்னிப் [illegible]கதை வரைய வேண்டாம். எமது கண்மணிக்குண்மணி போன்று, இறைமாட்சிக்கொரு காட்சியாயிருந்து வந்த விக்டோரியாப் பெருமாட்டி சொன்னதொன்றே போதும். முடி சூடி மணம்புரிந்து மகப்பேறு பெற்று வாழாத வாழ்ந்த மகோன்னததசையில் இவ்வூரில் ஒரு கோட்டைகட்டிக் குடி புகுந்தார்கள். "இங்கு வந்தபின் தான் எனக்குப் பல க்ஷேமகாரியம் நிகழ்ந்தன" வென்று தமது திருவாக்கால் சொல்லைப்பெற்ற பேரூர் இச்சிறூரே. பெருங்குடிப்பிறந்த சிலரே இவ்வூர் அருங்குடிகள். "பொருளின்மாக்களில் தனதனைப்

பொருளில்லாரில்லை" என்று கூறிய செல்வப்பொலிவு இவ்வூருக்கே பொருந்தும். இவ்வூரில் யோவான், யாக்கோப் என்றிரண்டு இரட்டையர்கள் இருந்தார்கள். ஏனைய இரட்டையரைப் போல் உருவத்தில் ஒரு சிறிதும் பேதமின்றியிருந்ததுடன் கல்வி, யறிவொழுக்கம் தூங்கா முயற்சியிலும் ஒத்திருந்தார்கள். பணமென்றால் பிசாசாய்ப் பறக்கும் துர்க்குணத்திலும் அப்படி. இவர்களுக்கும் பழைய உலகமேயன்றிப் புது உலகத்திலும் பல வேறு வகையான பெருத்த வர்த்தகம் உண்டு. இருவரில் ஒருவர் தலத்திலும், மற்றவர் தெல்லியிலும் இருந்து வியாபாரம் நடத்துவது வழக்கம். இவர்களது வர்த்தக முறையில் சில குழூஉக்குறியுண்டு. அவை இவ்விருவருக்கன்றி மற்றெவர்க்குந்தெரியா. இவரில் முந்தியவர்க்குச் சந்ததியில்லை. பிந்தியவருக்கு ஒரேபெண் இவ்வரியாள் தான் மேதாமரியாள். பக்திவிநயம், புத்திநுட்பம், பின்பற்றுந்திறம், முன்னேறுங்குணம் முதலியவற்றில் இவளுக்கிவளே யிணை. தன்றந்தை முன்றந்தை யிருவர்க்கும் இருகண்ணுயுள்ளவள். இவர்களது பரமரகசியக்குழூஉக்குறியை, தன் புத்திநுட்பத்தால், தாதையார் அறியாமல் முற்றிலும் அறிந்துகொண்டுள்ளாள். இது நிற்க.

இவள் தருணிப்பருவ மடைந்தவளாய்க் கணவனைத் தெரிந்தெடுப்பாளாயினள். நம்மைப்போல் பாவைக்கல்யாணம் பண்ணுகிறதில்லை. நம்மில் பெண்களுக்கு கண்கட்டியாடுங் காலமன்றோ கணவனைப் பெறுங்காலம்? இதிலும்,

தந்தை குணம்பார்ப்பார் தாயார் பணம் பார்ப்பார்
பந்து குலம் பார்ப்பார் பாவை நலம் பார்ப்பாள்.

சின்னக்குழந்தைகளும் வன்னப் பொம்மை வேண்டியழுவது கண்ட நாம் பாலைப் பருவத்தவள் அழகுடைமை பார்ப்பதெங்ஙுனம் என்று சிறிதும் ஆசங்கையுறோம். நமது வழக்கு இதுவாக, மேனாட்டார் வழக்கோ, பேதைப்பருவம் நீங்கிப் பெதும்பையும் கடந்து மங்கைப்பருவம் வாய்ந்தபின்னர் நங்கையர்கள் தங்கணவரைத்தாமே தேறுவதாம். இவ்வழக்கம் நமது ஆரியாவர்த்த அரச கன்னிகைகளிடத்தில் சுயம்வரம் என்றும், தமிழ்நாட்டுப் பெண்களிடம் கந்தர்வமார்க்கம் என்றும், பண்டைக்காலத்துள்ள ஒன்றேயாம். பண்டைத் தமிழிலக்கம், தொழின்முயற்சி, கைத்தொழிற்றிருத்தம், வர்த்தகப்பெருக்கம், முதலியான இன்றைய மேனாட்டாரிடம் சேர்ந்தவாறே, கன்னியர் தலைவர்த்தேறும் கிரமப்

அங்ஙனம் சென்றது போலும். அங்ஙனம் சென்றது இங்ஙனம் என்று திரும்புமோ அறியேம். நமது மரியா விஷயத்தில் இம்மேனாட்டார் வழக்கும் சற்றுமாறி நின்றது. இவள் ஒருகணவனைத்தேறப் பிதா வேறொருவனைக் கூட்டுண்டான கட்டம் மட்டற்றது. இவள் தந்தையார் இருவர் சோதரருக்கும் பொருளே தெய்வம். பொருள் என்றால் போனவுயிரும் வரும். இவ்விருவரும் பெருஞ்செல்வ முற்றுளொருவனை இவளுக்குக் கணவனாகக் கோரினர்கள். இச்சீராளனுக்குக் கல்வி கேள்வி பூச்சியம். குணநலம் குலநலம் ஒருசிறிதும் இல்லை. பணநலத்தில்மட்டும் தம்மில் மும்மடங்கானவன். மரியாள் தேறியமணாளனோ குணபூஷணன், குலகம்பீரன், பிறர்மதிப்பு, பெருந்தகைமை, பெரியோரைப்பேணல் உரியோர்க்கிதம்செயல், முதலிய சிறந்த[illegible]டையுண்டு. கல்விக்கடலைக் கரைகண்டவன். "இருவேறுலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும்" என்றவாக்கு இவ்விருவர் விஷயத்தில் வெகுபொருத்தமுடையது. "இல்லானை யில்லாளும் வேண்டாள்" என்றிருக்க நமது பெண்மணி குணமே பணம், குலமே கலன், எனக்கொண்டவளாயினள். இவனுக்குக் கொடேன் என்பார் தந்தை, இவனை விடேன் என்பாள் தனையை. சொற்கேளாதவளுக்குச் சொத்துக் கிடைக்காது என்பார்; எக்கேடுவந்தாலும் இந்தக்கோனே போதும் என்பாள். இவ்வணம் கொடாதகண்டன் விடாதகண்டன் கதைசிலநாள் நடந்துவந்தது.

பணத்தினிமித்தம் பிதாவின் குணமனைத்தும் மாறிவருவது கண்ட பெண்மணி, தனது ஆவித்துணையைப் பிதா அருங்கொலை புரியினும் புரிவர், அப்பால் அவர்தேறிய ஒருவனையே நாம் அடையவேண்டிவரும். மூடர்கூட்டுறவு முழுதும் அபாயம் என்றுகண்டு, ஆ[illegible]க்காரன் ஆலிங்கனத்திலும் கூட்டிக்காரன் குட்டுத்திறம் எனக்கொண்டு, வனத்துட் புகுந்தாயினும் இவனோடு சுகித்திருப்பதே நலம் என நேர்ந்தாள். இவள் கையில் முந்நூற்றுச் சொச்சம் பொன் இருந்தது (பொன்=பவுன்) இது இளம் பிராயத்தில் பள்ளியிற் சிறந்து விளங்கினதற்குப் பல முறை பிதாவாற் கொடுபட்ட பரிசுத் தொகை. வீண் செலவு செய்யாது மீத்து வைத்திருந்தாள். இவள் செட்டு இம்முட்டுக்குதவியது. ஒருநாள் நள்ளிரவில் புறப்பட்டு கணவனைத் துணைவனாக்கி, காடுகடந்து நாடு புகுந்து ஓரூரையடைந்து கொடைக்கூலிக்கு ஒரு வீடு அமர்த்தி அதில் குடியமர்ந்தார். சென்ற சில நாளைக்குள் தேச வழக்கப்படி, கொடுப்பாரும் தடுப்பாரும் இன்றி, குருவின் சமுகத்தில் திருவனைய மரியாள் குமரனை மணந்தாள்.

(இன்னும் வரும்)

ஐ. சுவாமிநாத முதலியார்.

# பத்திரிகைகளும் புத்தகங்களும்.

சென்ற இரண்[illegible]ங்களில் வரப்பெற்ற மாற்றுப்பத்திரிகைகள்:—

சுதேசி: பு-2, இ-77-87; (2) சிங்கைஜ[illegible]மித்திரன்: பு-4, இ-1-2; (3) நாகை நீலலோசனி: பு-17, இ. 13-15; (4) கோயமுத்தூர் கலாநிதி: பு-26, இ. 17-18; (5) விவேகசிந்தாமணி: பு-15, ச-4; (6) ஸ்ரீ வாணிவிலாஸினி: வா-3, ந-1[illegible]-15; (7) செந்தமிழ் தொ 4, ப-10; (8 பிரம்மஞானபத்திரிகை: வா-1, ந-2-3; (9) சித்தாந்ததீபிகை: வா-7, ந. 5; (10) கோவைசுஜனாபிமானி, பு. 1, இ 6-8; (11) ஆரியன்: [illegible] இ-1; (12) இந்தியா: பு-1, இ-16-21; (13) கோவை சுஜனாபிமானி [illegible]த்திராதிபர் அவர்கள் தம்மால் இயற்றப்பட்ட "எனது நெடுங்கனவு" என்ற ஓர் நவீன கதையினை அப்பினார்கள். அதனைப்படித்து எமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கச் சாவகாசமில்லாதபடியினால் அடுத்த சஞ்சிகையில் அதனைக்குறித்து எழுதுகின்றோம்.

பத்திராசிரியர்.

---

## நோட்டீஸ்

---

நமது பத்திரிகைக்கு **Mr. S. V.** [illegible]சந்திரராவ் அவர்களை [illegible]ஜனா[illegible]க ஏற்படுத்தியிருக்கிறோம். [illegible]னேஜர் கையொப்பமிட்டிருக்கிற ரசீதை இவரிடமிருந்து பெற்றுக்கொண்டு ஷை யாரிடத்தில் சந்[illegible]வைச்செலுத்தும்படி சந்தாதாரர்களைக்கேட்டுக்கொள்[illegible]கிறோம். மானேஜர்கையொப்பமிட்ட ரசீதைத்தவிர மற்றரசீது செல்லாது.

**C. S.** முத்துஸாமி ஐயர்.

# தமிழகம்,

இது தஞ்சைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் ஒரு பத்திரிகை. இதன் வருஷ சந்தா இந்தியா பர்மாவுக்கு ரூ. 1—8—0. சிங்கப்பூர், [illegible], முதலான இடங்களுக்கு ரூ. 2—8—0. இப் பத்திரிகை வேண்டுவோர் இதன் மானேஜர் அவர்களிடத்தில் சந்தாவை முன்பணமாக நேரே செலுத்தியாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயனுப்பியாகிலும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். பலநண்பர்களின் வேண்டுகோளிற்கிணங்கி மாணாக்கர்களுக்குச் சந்தாவைக்குறைத்திருக்கிறோம். ஆங்கில கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்கள் தமது தலைமை உபாத்தியாயர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளுவார்களானால் அவர்களுக்குப் பத்திரிகை ரூ. 1—0—0க்குக் கொடுக்கப்படும். பத்திரிகைக்கு விஷயம் எழுத விரும்புகிறவர்கள் தங்கள் வியாசங்களைப் பத்திராதிபர்பேருக்கு அனுப்பக் கோருகிறோம்.

விளம்பரம் போடுவதற்கு வரி யொன்றுக்கு அணா 1. நீடிய காலம் பிரசுரித்து வரவேண்டியவைகளுக்குப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படும்.

C. S. முத்துஸ்வாமி ஐயர்,
மானேஜர், தமிழகம்,
தஞ்சை.

---

## புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்கள் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தில் விலைக்கு அகப்படும். வேண்டியவர்கள் மேற்படி சங்கக் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| 1. | கத்தியசிந்தாமணி, ஸம்ஸ்கிருதவசனம் [illegible] வாதீபசிம்மசூரியினால் செய்யப்பட்டது. | 2—0—0 |
| 2. | க்ஷத்திரசூடாமணி, (ஸம்ஸ்கிருத காவியம்) காலேஜ் பாடம். | 0—15—0 |
| 3. | ஜீவந்தர சம்புகாவியம், ஸம்ஸ்கிருதம் (ஹரிசந்திர மகாகவி.) | 1—0—0 |
| 4. | தஞ்சை நாயக ராஜவம்சசரித்திரச் சுருக்கம் (தமிழ்) | 0—2—6 |
| 5. | ஸம்ஸ்கிருத நீதிமஞ்சரி, நம்பி[illegible]. | 0—6—0 |
| 6. | சுவாமிநாதவிஜயம். | 0—1—0 |
| 7. | தொல்காப்பியப்பாயிர விருத்தி. | 2—0—0 |
| 8. | மாலைமாற்று மாலை. | 0—4—0 |
| 9 | சிவக்ஷேத்திர யாத்திராநுகூலம். | 0—4—0 |
| 10. | சுதேச வைத்திய ரத்தினம் | 1—6—0 |

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்,
7—10—05.

K. M. சுப்பராம ஐயர்,
காரியதரிசி.

16/4/81